பொதுசன நூலகம்

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 09 சனிக்கிழமை (21.02.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 064




# விடுதலைப் புலிகளின் விமானங்கள் கொழும்பில் நேற்று இரவு தாக்குதல்

## 2 பேர் பலி; 48 பேர் படுகாயம், 2 மணி நேரம் மின்சாரம் தடை, கட்டடங்கள் சேதம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் இரண்டு விமானங்கள் நேற்றிரவு 9.30 மணியளவில் கொழும்பில் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் 2 பேர் உயிரிழந்துள்ளதுடன் 48 பேர் படுகாயமடைந்துள்ளனர். புத்தளம் பகுதியூடாக சென்ற அவ் விமானங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டடத்தின் மீது தாக்குதல் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இத்தாக்குதல் சம்பவத்தை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார உறுதிப்படுத்தியுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)



# தாக்குதல் நடத்திய விமானங்கள் இரண்டும் சுட்டு வீழ்த்தப்பட்டன

## அமைச்சர் கெஹலிய தகவல்

(கொழும்பு)

கொழும்பில் தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகளின் இரண்டு விமானங்களும் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஒரு விமானம் கோட்டை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு அருகிலும் மற்றைய விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அருகிலும் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்கா விமான நிலைய பகுதியில் இருந்து புலிகளின் விமானத்தின் சிதைவுகள் மீட்கப்பட்டுள்ளதுடன் விமானியின் உடலும் மீட்கப்பட்டதாகவும், அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இத் தாக்குதல் குறித்து சுயாதீனமான தகவல் எதனையும் பெற முடியவில்லை.

இதேவேளையில் புலிகளின் இரண்டாவது விமானம் (12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி யாழ் விஜயம்

(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் சரத் பொன்சேகா தலைமையிலான உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளனர்.

பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த இராணுவத் தளபதியை யாழ் பாதுகாப்புப் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மெந்தக சமரசிங்க தலைமையிலான உயர் அதிகாரிகள் வரவேற்றனர்.

யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்ந்து (12ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு நோக்கி படையினர் முன் நகர்வு!

### பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புலிகளிடம் எஞ்சியிருக்கும் ஒரேஒரு நகராகிய புதுக்குடியிருப்பு நகரைக் கைப்பற்றுவதற்காக படையினர் அப்பிரதேசத்தைச் சுற்றிவளைத்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

புதுக்குடியிருப்புக்கு வடமேற்கே விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது நேற்று மாலை விமானப் படையினர் விமானக் குண்டுத்தாக்குதல்களை நடத்தி விடுதலைப் புலிகளுக்கு சேதங்களை ஏற்படுத்தியிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

புதுக்குடியிருப்புக்கு வடக்கே சாலை கடலேரியின் மேற்குக் கரையோரத்தில் உள்ள அம்பலவன் (12ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைத் தாக்குதலா?

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் விமானம் மூலம் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனரா என்ற சந்தேகம் பல டத்தரப்புக்கு ஏற்பட்டுள்ளதாக பாதுகாப்பு ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் விமானங்கள் நேற்றிரவு கொழும்பில் தாக்குதல் நடத்தின.

அவற்றை சுட்டு வீழ்த்தியதாகவும் அவ் விமாணங்களின் பாகங்கள் ஆங்காங்கே சிதறிக் காணப்படுவதாகவும் படைத்தரப்பு கூறியுள்ளது. இந்நிலையில் புலிகள் விமானம் மூலம் முக்கிய இடங்களை தற்கொலைத்தாக்குதல் மூலம் அழிப்பதற்கு முயற்சி செய்திருக்கலாம் என்றும் (12ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணைத் தாக்குதலில் நேற்று 17 பேர் பலி; 43 பேர் படுகாயம்

(கொழும்பு)

வன்னிப்பகுதி நோக்கி நேற்று மேற்கொள்ளப்பட்ட எறிகணைத்தாக்குதலில் 17 பொது மக்கள் உயிரிழந்துள்ளதுடன் 43 பேர் காயமடைந்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று வீழ்ந்து வெடித்த எறிகணைத் தாக்குதலில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

மக்கள் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் பகுதி மீது நேற்று நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் 5 பேர் பலியாகியுள்ளனர்.

இந்த இரு இடங்களிலும் 35 பேர் காயமடைந்துள்ளனர். புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரம், இரணைப்பாலை, முள்ளிவாய்க்கால் பகுதிகள் மீது நேற்றுப் பிற்பகல் நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் 5 பேர் கொல்லப்பட்டதுடன் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

வினோஜன் (12ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் மீதான தாக்குதல்களை அரசும் புலிகளும் நிறுத்த வேண்டும்

### மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் வன்னி பிராந்தியத்தில் மேற்கொண்டுவரும் பொதுமக்கள் மீதான எறிகணை தாக்குதல்களை உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் உள்ளக இடப்பெயர்வுகளுக்குஉள்ளாகிய மக்களை, தற்காலிக முகாம்களில் சிறைவைக்கும், அரசாங்கத்தின் கொள்கையையும் மாற்றிக் கொள்ள வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தால் நேற்று வெளியிடப்பட்டுள்ள 45 பக்கங்களைக் (12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பிரிவு

# வணிகமாணிப் பரீட்சையில் 61 மாணவர்கள் சித்தி

2008ஆம் ஆண்டில் நடாத்தப் பட்ட வணிகமாணிப் பரீட்சையில் சித்தியடைந்து பட்டம் பெறுவோரின் பட்டியல் வெளியாகியுள்ளது.

இம்முறை இப்பரீட்சையில் 61 மாணவர்கள் வணிகமாணிப் பட் டத்தை பெறுகின்றனர்.

மாணவர்கள் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு டன் தொடர்பு கொண்டு பரீட்சைப் பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள லாம் என வெளிவாரிப் பரீட்சைப் பிரிவின் இணைப்பாளர் க.சிவ ராஜா அறிவித்துள்ளார்.

பட்டம்பெறும் மாணவர்களின் விபரம் வருமாறு;

**இரண்டாம் வகுப்பு (கீழ்ப் பிரிவு) சித்தி**

எஸ்.கிருஷாந்தி, எஸ்.சுரேஸ்குமார், வை.நிமலன், எஸ்.செல்வரதன்

**சாதாரண சித்தி**

ரி.அபிராமி, எஸ்.சந்திரகுமார், எஸ்.கிருபாலினி, எஸ்.மதனரூபன், கே.நர்மதா, டி.விக்டர் ஜோசப், ரி.நாகநந்தினி, பி.இளங்கீரன், எம்.கெனடி, பி.கிருஷ்ணரூபா, ரி.பானுரேகா, பி.டொன்பொஸ்கோ, எல்.துஷாந்தி, எஸ்.காமினி, பி.ஹரிதா, வை.ஜலஜா, பி.யோகா னந்தம், எஸ்.கார்த்திகா, கே.கஜ ரூபினி, பி.குமுதினி, ஏ.லீனஸ் நிலோஜன், பி.பிரவீனா, எஸ்.பிரிய தர்ஷினி, எஸ்.றஜீதா, ஆர்.சகிலா, எஸ்.சபேஷ், எஸ்.சவுந்தினி, கே.சயரூபன், பி.சகுந்தலா, எஸ்.சைலஜா, எஸ்.சிவரஞ்சினி, பி.சிவரஞ்சினி, ஆர்.சுபாசினி, கே.சுகிர்தா, ஆர்.சுகந்தரூபி, எம். விபுலானந்தன், ரி.லின்ரஸ், ஆர்.ஜெயகௌரி, எஸ்.சண் முகப்பரியா, கே.ஈஸ்வரலிங்கம், எஸ்.மதுராம்பிகை, ஏ.பத்மாஜினி, ரி.தர்ஷினி, எஸ்.சித்ராதேவி, எஸ்.சாந்தநாயகி, கே.சிவஞானம், ஆர்.பாமினி, ஏ.அனுஷியா, ரி.கோமதி, ரி.ஜெயநந்தன், எம்.நிவி ந்தன், ரி.செந்தூரன், எம்.சுதன், கே.கஜேந்திரன், எஸ்.புஸ்பகாந்தி, எக்ஸ். பலசிடா குமுதினி, ரி.யாழினி. (ச)

## ரி.எம்.வி.பி. உறுப்பினர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு நகர பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவர் வீதியில் வைத்து அடையாளம் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நாவற்காட் டைச் சேர்ந்த திருமால் சிவனேசன் (சரத்தீசன்) (வயது 26) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

அரசடி சந்தியிலுள்ள அலுவ லகத்திலிருந்து தேவையொன்றின் நிமிர்த்தம் அருகிலுள்ள மருந்துக் கடையொன்றுக்குச் சென்று கொண்டிருந்த போது எதிர் கொண்ட ஆயுததாரிகளே இவரைச் சுட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தலையில் துப்பாக்கிக் குண் டுகள் பாய்ந்து காயமடைந்த நிலை யில் மட்டக்களப்பு போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சைகள் பலனளிக் காத நிலையில் இவர் உயிரிழந் துள்ளார். (ச-5)

## சாயி சேவா நிலையத்தில் மகா சிவராத்திரி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு அன்றைய தினம் யாழ்ப் பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் நிகழ்ச்சிகளிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

நாளை மறுதினம் திங்கட் கிழமை மாலை 6.30 மணிக்கு ஆரம்ப மாகும் நிகழ்வுகள் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணிவரை நடைபெறும். இந்நிகழ் வுகளில் பஜனை, வில்வ அர்ச்சனை என்பன நடை பெறவுள்ளன. (ச-14)

## வர்த்தக ஊழியர்களுக்கு 24 ஆம் திகதி விடுமுறை

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினத்தை முன் னிட்டு விரதமிருக்கும் வர்த்தக உரிமையாளர்கள் மற்றும் ஊழி யர்கள் நன்மை கருதி மகாசிவராத் திரி தினத்திற்கு அடுத்த நாளாகிய 24.02.2009 செவ்வாய்க்கிழமை வர்த்தக ஊழியர்களுக்கு விடு முறை வழங்குமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது. (ச)

## அவலத்திலுள்ள எம் உறவுகளுக்காக இறைவனை மனமுருகி இறைஞ்சுவோம்

### இந்து மகாசபை வேண்டுகோள்

(கொழும்பு)

வன்னிப் பிரதேசத்தில் வார்த் தைகளால் வர்ணிக்க முடியாத சொல்லொணா அவலத்தை எமது உறவுகள் தினம் தினம் சந்தித் துக்கொண்டிருக்கிற இவ்வேளை யில் ஏதிலிகளின் பங்காளனாகிய இறைவனை மனமுருகி பிரார்த் திக்குமாறு ஒவ்வொரு இந்துக் களையும் இச்சிவராத்திரி காலத் திலே வேண்டிக்கொள்கிறோம் என அகில இலங்கை இந்து மகாசபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இந்து மகா சபை வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

எம் மக்களுக்கு ஓர் உருக்கமான வேண்டுகோள்! வார்த்தை களால் வர்ணிக்க முடியாத சொல் லொணா அவலத்தை எமது உறவுகள் தினம் தினம் சந்தித்துக் கொண்டிருக் கின்றனர். இந்த கொடுமை மிகுந்த அவலநிலையிலிருந்து எமது மக்களை காப்பாற்றுவதற்கு இவ் உலகிலுள்ள எந்த பெரிய மனித சத்தியுமே முன் வரவில்லை.

இந்நிலையில் ஏதிலிகளின் பங்காளனாகிய இறைவனை மன முருகி பிரார்த்திக்குமாறு இச்சிவ ராத்திரி காலத்திலே வேண்டிக் கொள்கிறோம். இதற்கான ஏற்பாடு களை ஒவ்வொரு இந்து நிறுவனங் களும் சமயத் தலைவர்களும் குருமார்களும் . செய்யுமாறு வேண்டி நிற்கின்றோம்.

எமது உறவுகளின் துயர் துடைக் கின்ற கைங்கரியங்ளில் நாம் அனைவரும் பங்கெடுக்க வேண் டியது இறைவனை நம்புகின்ற மனச்சாட்சியுள்ள ஒவ்வொரு வரினதும் கடமையாகும். வாழ் விலே சகல வளங்களையும் தொ லைத்து நிற்கின்ற எம் உறவுகளுக்கு அவர்களின் அடிப்படைத் தேவை களையாவது பூர்த்தி செய்வதற்கு எமது ஒவ்வொரு இந்து நிறுவனமும் ஆலயங்களும் முன் வரவேண்டும். ஆழிப்பேரலை காலத்தில் உதவியது போன்று எம்மக்களுக்கு உளரீதியாக ஆறு தல் அளிக்க எமது நிறுவ னங்கள் முன் வரவேண்டும்.

இந்தத் துயர்மிகு காலத்தில் எமது விழாக்கள் யாவற்றையும் ஆடம்பரத்தை அறவே கைவிட்டு பிரார்த்தனை வைபவங்களாக எமது உறவுகளுக்கு உதவுகின்ற கைங்கரியங்களுக்கு பயன்படு கின்ற வைபவங்களாக மாற்றிய மைக்கவேண்டும்.

உங்களுடைய உதவிகளை சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடா கவும் தொண்டர் நிறுவனங்கள் ஊடா கவும் வழங்க முடியும். மேலும் எம் முடைய பழம் பெரும் சமய நிறுவ னங்கள் இந்தப் பணியை உண்மை யான இறைபணியாக ஏற்று நிர்க் கதியாய் நிற்கின்ற எம் உறவுகளின் வாழ்வில் சிறிய ஆறு தலையாவது அளிக்க முன்வருமாறும் விநய மாக வேண்டி நிற்கின் றோம்.

சொந்த சகோதரர்கள் துன்பம் , செத்து மடிதல் கண்டு சிந்தை யிரங் காத பாவிகளாய் நாம் இராது எமது உறவுகளின் துன்பத்தில் நாமும் பங்கெடுத்து எம்மாலா னவற்றை செய்வதற்கு இச்சிவராத் திரிகாலத் தில் திடசங்கற்பம் பூணுவோமாக என்றுள்ளது. (ச-5)

## இலங்கை விடயத்தில் தலையிட முடியாவிட்டால் இந்திய - இலங்கை ஒப்பந்தம் சாத்தியமா?

### கேள்வி எழுப்புகிறார் விஜயகாந்த்

(சென்னை)

இலங்கைப் பிரச்சினையில் ஓரளவுக்குத்தான் தலையிட முடியும் என்று மத்திய அரசு கூறுகிறது.

அப்படியானால் இலங்கை யுடன் இந்தியா எப்படி ஒப்பந்தம் செய்து கொண்டது? என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கேள்வி எழுப்பினார். இலங்கை அரசைக் கண்டித்தும் அங்கு போர் நிறுத்தம் செய்ய ஐக்கிய நாடுகள் சபையும் அமெரிக்காவும் தலையிட வலியுறுத்தியும் விஜயகாந்த் தலை மையில் நேற்று தே.மு.தி.க பேரணி நடந்தது.

சென்னை தீவுத்திடலில் இருந்து சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளி கை வரை நடந்த இந்தப் பேரணி யில் விஜயகாந்த் உள்ளிட்ட ஆயிரக் கணக்கான தொண்டர்கள் கறுப்புச் சட்டை அணிந்து நடந்தனர்.

பேரணியின் முடிபில் விஜய காந்த் பேசுகையில். நம் மக்கள் இலங்கையில் தினம் தினம் செத்து மடிகிறார்கள். அதனால் நமக்கு இந்த வெயில் ஒன்றும் பெரிதல்ல. இலங்கை அதிபர் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே வைத்தால்தான் போர் நிறுத்தம் என்று கூறுகிறார்.

அதே கருத்தைத் தான் மத்திய அமைச்சர்கள் பிரணாப் முகர்ஜியும் சிதம்பரமும் கூறுகிறார்கள். பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு வந்தால் தானே விடுதலைப்புலிகள் ஆயுத ங்களை கீழே வைக்க முடியும். விடுதலைப் புலிகள் வைத் திருப்பது கேடயம் தான். இலங்கை அரசோ கத்தியை வைத்திருக்கிறது. கேடயம் வைத்திருப்பவர் அதனை கீழே போட்டுவிட்டால் கத்தி வைத் திருப்பவர் அவரை குத்திவிட மாட்டாரா?

ஆகையால் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விட்டு அதன் பிறகே விடுதலைப் புலிகளை ஆயுதங்களை கீழே வைக்கச் சொல்லவேண்டும்.

நான் நடிகனாக இருந்தபோதே இலங்கைத் தமிழர் பிரச்சினைக் காக எம்.ஜி.ஆர்., சிவாஜி நடத்திய ஊர்வலங்களில் பங்கேற்றிருக் கிறேன். இலங்கைத் தமிழர் பிரச் சினை முடியும் வரை பிறந்த நாள் கொண்டாடுவதில்லை என்றும் முடிபு செய்திருக்கிறேன்

நாடாளுமன்றத் தேர்தலை தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் புறக்கணித் தால் தான் இலங்கை விடயத்தில் ஐ.நா. தலையிடும் என்று நான் கூறுகிறேன். தமிழர்கள் மீது இலங் கையில் வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றது. அதனை தி.மு.க. அரசு இதுவரை கண்டிக்க வில்லை என்றார். (ச-5)

## களவு போன சைக்கிள் வைத்திய சாலையில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சைக்கிள் திருடிய திருடனை யாழ். போதனா வைத்தியசாலை சைக்கிள் தரிப்பிடத்தில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 13 ஆம் திகதி யாழ்ப் பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த தங்கவேலு சந்திரகுமார் என்பவரின் சைக்கிள் அவரது வீட்டிற்கு முன்னால் உள்ள கோயி லில் விடப்பட்ட வேளை திருடப்பட்டது.

பிரஸ்தாப நபர் நேற்று முன் தினம் வியாழக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலைக்கு சென்ற போது தரிப்பிடத்தில் தனது சைக்கிள் இருப்பதை கண்டுள்ளார். பின்னர் திருடனை மடக்கிப் பிடித்து யாழ். குற்றவியல் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

சந்தேக நபரை கைது செய்த பொலிஸார் நேற்று அவரை யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். இவ் வழக்கினை விசாரணை செய்த நீதி வான் ஆர். வசந்தசேனன் சந்தேக நபரை மார்ச் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிட்டார். (ஓ-7)

## மரண அறிவித்தல்

### வயிரவன் சிதம்பரப்பிள்ளை



எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாக வும் சண்டிலிப்பாயை தற்காலிக வசிப்பிட மாகவும் கொண்ட வயிரவன் சிதம்பரப்பிள்ளை 20.02.2009 நேற்று வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் குஞ்சுப்பிள்ளையின் அன்புக் கணவரும் ஜெயபாலச்சந்திரன் (டென்மார்க்), சந்திரபாபு (ஜேர்மன்), புவனச்சந்திரா, வசந்தாதேவி, சாந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21.02.2009 இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கராச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்

நிரந்தர முகவரி:
எழுது மட்டுவாள் தெற்கு,
எழுதுமட்டுவாள்.

தற்காலிக முகவரி:
ஐயனார் சிலையடி,
சண்டிலிப்பாய்.

(2280)

## நிறுவுநர் தினவிழா

காங்கேசன்துறை சாரணர் மாவட்டக் கிளைச்சங்க நிறுவுநர்தின விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் மாவட்ட சாரண ஆணையாளர் ந.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் எ.அன்ரன் யோகநாயகமும் சிறப்பு விருந் தினர்களாக சண்டிலிப்பாய் கோட் டக்கல்விப் பணிப்பாளர் சி.கந்த சாமி, வடமாகாண சாரண ஆணை யாளர் த.நா.போஜன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக சண்டிலிப் பாய் இந்துக் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தனும் கலந்து கொள்ள வுள்ளனர். (ச-14)

யாழ். பல்கலைக்கழக பரதநாட்டிய நுண்கலைமாணி, பரதநாட்டிய கலாவித்தகர்

**செல்வி உமாமகேஸ்வரி உதயகுமார்**

அவர்களின்

**"பரதநாட்டியக் கச்சேரி முறைமை"**

**நூல் வெளியீட்டு விழா**

இடம்

இணுவில் பொதுசன நூலக மண்டபம், இணுவில்

*காலம்* : 22.02.2009 ஞாயிற்றுக்கிழமை

காலை 10.00 மணி

**தலைவர்:** திருவாட்டி ஸ்ரீகாந்தலக்ஷ்மி அருளானந்தம்
(பதில் நூலகர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

போசகர் : இணுவில் பொதுநூலகம்

முதன்மை விருந்தினர்

**திருமதி பத்மினி செல்வேந்திரகுமார்**
(இயக்குநர், கலைக்கோவில், உரும்பிராய், நடன ஆசிரிய ஆலோசகர், யாழ். கல்வி வலயம்)

சிறப்பு விருந்தினர்

**திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன்**
(தலைவர், நடனத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

**செல்வி பாக்கியலட்சுமி நடராஜா**
(தலைவர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

- நூலாசிரியர்

(2272)

# இன்று ஒரு தகவல்

## குண்டு மனிதர்கள்

"எனக்கு என்னுடைய உடம்புதான் பெரிய இடைஞ்சல்" என்றார் ஒருவர்.

"ஏன்? என்ன செய்கிறது?" என்றேன்.

"எங்கே போனாலும் அதுவும் கூடவே வந்து கொண்டிருக்கிறது" என்றார் அவர்.

நமது உடம்பு அளவுக்கு மீறி குண்டானால் நமக்கும் இதுதான் பிரச்சினை. ஒரு அம்மா தன்னுடைய கைக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு டாக்டரிடம் வந்தார்.

"டாக்டர்... இவனைப் பாருங்கள் எவ்வளவு ஒல்லியாக இருக்கிறான். குழந்தை குண்டாவதற்கு ஏதாவது டொனிக் எழுதிக்கொடுங்கள்" என்றார்.

அதே குழந்தை வளர்ந்து பெரியவனானான். அதன் பின்னரும் அந்தம்மா டாக்டரிடம் வந்தார். இப்பொழுது என்ன சொன்னார் தெரியுமா?

"டாக்டர்... இவன் எப்பொழுது பார்த்தாலும் எதையாவது சாப்பிட்டுக் கொண்டே இருக்கிறான். என்ன சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிறான். ஏதாவது மாத்திரை கொடுத்து இவன் உடம்பைக் குறையுங்கள்" என்றார்.

ஒருவருடைய உயரத்திற்கேற்றாற் போல் அவரது சராசரி எடை இருக்க வேண்டும். உதாரணமாக ஒருவரது உயரம் 172 செ.மீற்றர் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர் ஆண் எனில், அவரது எடை 62 கிலோவாகவும், பெண் எனில் அவரது எடை 60.5 கிலோவாகவும் இருக்க வேண்டும். இந்த சராசரி எடையில் சற்று கூடக் குறைய இருந்தாலும் பரவாயில்லை.

ஆனால் அதைவிட 20 சதவீதத்திற்கு அதிகமாகவோ அல்லது 20 சதவீதத்துக்குக் குறைவாகவோ இருப்பது ஆரோக்கியமானதல்ல. சராசரி எடையை விட 20 சதவீதம் அதிக எடை உள்ளவர்களைத்தான் நாம் குண்டானவர்கள் (Obesity) என்று சொல்கிறோம்.

சராசரி எடையை விட 30 சதவீதம் அதிக எடை கொண்டவர்களுக்கு இதயநோய், இரத்தக் கொதிப்பு, சர்க்கரை நோய், பக்கவாதம், பித்த நீர்ப்பையில் கல் போன்ற நோய்கள் ஏற்படலாம்.

குண்டாக இருப்பதில் இரண்டு வகை உண்டு. ஒன்று முழு உடம்பும் குண்டாக இருப்பது. இன்னொருவகை தொப்பையாக இருப்பது.

ஆசியாவில் தொப்பையாக உள்ளவர்கள் தான் அதிகமாம். முதல்வகையுடன் ஒப்பிடும் போது இந்த இரண்டாவது வகையினருக்குத்தான் நோய்கள் அதிகம் வருவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

Increase in waist Line will Decrease in Life line என்று சொல்வதுண்டு. சரி... உடல் குண்டாவதற்கு என்ன காரணம் என்று குண்டானவர்களைக் கேட்டால்...

"ஐயோ.. நான் எதுவுமே சாப்பிடுவதில்லை. ஆனால் உடம்பு மட்டும் குறையவேயில்லை" என்கின்றார்கள்.

இதற்கு என்ன காரணம் என்று டாக்டர்களிடம் கேட்டால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

"அப்படிச் சொல்பவர்கள் எல்லோருமே ஏதாவது ஒரு கட்டத்தில் அதிகமாக சாப்பிட்டுக் கொண்டிருப்பார்கள். அல்லது அதிக கலோரி கொண்ட உணவை சாப்பிட்டிருப்பார்கள்" என்று சொல்கிறார்கள்.

அதேபோல் அவர்களது உடல் உழைப்பு குறைந்து போயிருக்கும். அதுவும் ஒரு காரணம். இந்தக்காலத்தில் உடல் ரீதியாக செலவழிக்கும் சக்தி குறைந்து இருக்கும். உள்ளே போகும் ஆகாரத்தின் சக்தி தேங்கிப் போகிறது. அது தொப்பையை வரவழைத்து விடுகிறது. அவ்வளவு தான் விஷயம்.

சரி.. உடம்பைக் குறைக்க நினைப்பவர்கள் என்ன செய்ய வேண்டும்? கொஞ்சமாக சாப்பிடவேண்டும். அதிக வேலை செய்ய வேண்டும். தினமும் முக்கால் மணி நேரமாவது நடக்க வேண்டும். பால், எண்ணெய், நெய், அட்டிறைச்சி, தேங்காயெண்ணெய், கடலையெண்ணெய் இவற்றைத் தவிர்க்க வேண்டும்.

சூரியகாந்தி எண்ணெய், நல்லெண்ணெய் என்பவற்றைப் பயன்படுத்தலாம். சாப்பிடும் போது சோறு குறைவாகவும் வெள்ளரிக்காய், கீரை இவற்றை அதிகமாகவும் சாப்பிடலாம்.

அசைவ உணவு சாப்பிடுபவர்கள் மீன், கோழி, முட்டை வெண்கரு என்பவற்றை சேர்த்துக் கொள்ளலாம். அப்பிள், வெங்காயம், ரீ இது மூன்றும் ஹாா்ட் அட்டாக்கை குறைப்பதாக ஒரு ஆராய்ச்சி முடிவு.

மருந்து சாப்பிட்டோ பட்டினி கிடந்தோ உடம்பைக் குறைப்பது முடியாத காரியம். ஒரு குண்டாக ஆசாமி எடைபார்க்கும் மிஷினில் ஏறி நின்றார். காசு போட்டார். ஒரு சீட்டு வந்து விழுந்தது. அதை எடுத்துப் பார்த்தார். அதில் என்ன எழுதியிருந்தது தெரியுமா?

"ஒரு நேரத்தில் ஒருவர் மட்டுமே ஏறி நிற்கவும்" என்றிருந்தது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மிகக் குறைந்த வைத்திய வசதிகளுடன் இயங்கும் புது மாத்தளன் வைத்தியசாலை

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசாங்கம் அண்மையில் அறிவித்துள்ள பாதுகாப்பு வலயப்பகுதியில்



புதுமாத்தளன் மருத்துவமனையில் காத்துக்கிடக்கும் நோயாளர்கள்

உள்ள புதுமாத்தளன் வைத்தியசாலையில் பல்வேறு வசதியீனங்கள், மருந்துத் தட்டுப்பாடு, மன உளைச்சல்களுக்கு மத்தியில் அரச வைத்தியர்கள் பணியாற்றி வருவதாக முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் துரைராஜா வரதராஜா சுகாதார அமைச்சின் செளலாளருக்கு எழுதியுள்ள அவசரக் கடிதம் ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

இந்த வாரம் நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் இறந்து போன பலரது உடல்களும், காயமடைந்தவர்கள் பலரும் புதுமாத்தளன் வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், மிகவும் குறைவான வைத்திய வசதிகளுடன் பெரும் எண்ணிக்கையில் வந்துள்ள காயமடைந்தவர்களுக்கு எவ்வாறு சிகிச்சையளிப்பது என்று தெரியாமல் தாங்கள் திகைப்படைந்திருப்பதாகவும் அந்தக் கடிதத்தில் டாக்டர் வரதராஜா தெரிவித்திருக்கின்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார்கட்டு, சுதந்திரபுரம், தேவிபுரம் ஆகிய இடங்களில் இயங்கி வந்த வைத்தியசாலைகள் போர் பதட்டம் காரணமாக கைவிடப்பட்டு, தற்போது புதுமாத்தளன் வைத்தியசாலை மாத்திரமே இந்தப் பிரதேசத்தில் உள்ள பல்லாயிரக்கணக்கான மக்களுக்கான ஒரேயொரு வைத்தியசாலையாக வசதியீனங்களுக்கிடையில் இயங்கி வருவதனால், இந்தப் பிரதேசத்தின் வைத்திய சேவை நிலைகுலைந்து ஸ்தம்பிதமடையும் அபாய நிலைமை நிலவுகின்றது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.


ஒரு சிறிய பாடசாலை கட்டிடத்தில் ஆரம்ப வைத்திய நிலையமாக இயங்கி வருகின்ற புதுமாத்தளன் வைத்தியசாலையில் நாளாந்தம் 100 தொடக்கம் 200 வரையில் போர்க்காயங்களுடன் வருகின்ற காயமடைந்தவர்களை அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்துவதற்கு இட வசதியோ ஏனைய உட்கட்டமைப்பு வசதியோ இல்லாத நிலையில் வைத்தியர்கள் அங்கு போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் டாக்டர் வரதராஜா தெரிவித்திருக்கின்றார். (ஓ-5)

# குடாநாட்டில் உள்ள பாடசாலைகளின் அபிவிருத்திக்கு கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீடு

குடாநாட்டில் உள்ள ஆறு நவோதய பாடசாலைகளுக்கு 2009 ஆம் ஆண்டு நிர்மாண வேலைகளை மேற்க் கொள்வதற்கு சுமார் 10 மில்லியன் ரூபா நிதி கல்வி அமைச்சால் ஒதுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் உள்ள மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, நெல்லியடி மகாவித்தியாலயம், தென்மராட்சி மீசாலை வீரசிங்க மகாவித்தியாலயம், தீவகத்தில் நெடுந்தீவு மகாவித்தியாலயம், யாழ்ப்பாணத்தில் கனகரத்தின மகாவித்தியாலயம் மற்றும் வலிகாமம் மெமோறியல் பாடசாலை என்பவற்றின் நிர்மான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்டுவதற்கும் ஏற்கனவே மேற் கொள்ளப்பட்ட நிர்மான அபிவிருத்தி வேலைகள் பூரணப் படுத்துவதற்கும் இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதைவிட யாழ். மாவட்டத்தில் உள்ள 5 பாடசாலைகளின் அவசர தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு முதல் கட்டமாக 15 மில்லியன் ரூபா நிதியும் கல்வி அமைச்சால் ஒதுக்கப் பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள வட்பாரங்கள் தெரிவிக்கின்றன. (ஓ-7)



கோண்டாவில் ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலையின் ஆண்டு விழா மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்வில் மாணவர்கள் கடவுள் வணக்கத்தில் ஈடுபடுவதையும், அருகில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், இந்து சமய அபிவிருத்தி உதவியாளர் மற்றும் விருந்தினர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

21.02.2009

(மாசி 9, சனிக்கிழமை)

துவாதசி பின்னிரவு 3.26 மணிவரை

பூராடம் பிற்பகல் 2.02 மணிவரை

இராகுகாலம் 9.31 - 11.01 மணிவரை

சுபநேரம் 3.31-5.01 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | சத்துரு நாசம், பிரயாணம், புதிய திட்டமிடல், கட்டுப்பாடு. |
| இடபம் | நண்பர்கள் விரோதம், காரிய தடங்கல், போசன சுகம், வீண் பழி. |
| மிதுனம் | கீர்த்தி, காரிய அனுகூலம், மனோ தைரியம், பொருள் சேர்க்கை. |
| கடகம் | மனமகிழ்ச்சி, தனவருவாய், நல்ல முயற்சி, உறவினர் வருகை. |
| சிங்கம் | சொத்துக்களால் மனஸ்தாபம், பணக்குறைவு, கௌரவக் குறைவு, முயற்சி தாமதம். |
| கன்னி | தன்னம்பிக்கைக்குறைவு, கல்வியில் ஆர்வம், புதிய தகவல்,முயற்சி தாமதம். |
| துலாம் | மனமகிழ்ச்சி, விருந்துபசாரம், காரிய நன்மை, உறவினர் வருகை. |
| விருச்சிகம் | கடினவார்த்தை, போசன சுகக்குறைவு, முயற்சி தாமதம், தனலாபம் |
| தனுசு | வெகுமானம், ஆழ்ந்த சிந்தை, புதிய முயற்சி, போசன சுகம். |
| மகரம் | உணர்ச்சி வசப்படல், வீண் அலைச்சல், சுப செலவு, முயற்சி தாமதம். |
| கும்பம் | தனதானிய சேர்க்கை, முயற்சி பலிதம், நண்பர்கள் வருகை, போசன நன்மை. |
| மீனம் | நன்கொடை, பிரபுத்தனம், இஷ்ட சித்தி, ஆரோக்கிய நிலை |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 130 |
| உருளைக்கிழங்கு | 90-100 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 100 |
| தக்காளி | 60 | 80 |
| அவரை | 30 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 |
| கோவா | 40 | 50 |
| கரட் | 50 | 60 |
| பூசணி | 30 | 50 |
| புடோல் | 30 | 40 |
| வாழைக்காய் | 100 | 70 |
| சின்ன வெங்காயம் | 25 | 30 |
| பெரிய வெங்காயம் | 60 | 50 |
| பாகற்காய் | 80 | 50 |
| வெண்டிக்காய் | 40 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 |
| பயிற்றங்காய் | 40 | 60 |
| லீக்ஸ் | 110 | 120 |
| போஞ்சி | 15 | 20 |
| கீரை - 1 பிடி | 15 | 10 |
| தேசிக்காய் | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 |

## வர்த்தக நிறுவனங்களின் அளவீட்டு கருவிகளுக்கு முத்திரையிடும் பணி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து வர்த்தக நிறுவனங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள், சந்தை வியாபாரிகள் போன்ற பயன்பாட்டில் உள்ள நிறுவை, அளவை கருவிகளுக்கு முத்திரை இடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகத்தில் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்ட பணியில் எதிர்வரும் 24, 26, 27 ஆம் திகதிகளிலும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை யாழ் மாவட்ட செயலக அளவீட்டு அலகுகளும் , நியமங்களும் , சேவைகளும் திணைக்களப் பரிசோதகர் முன்னிலையில் முத்திரையிடப் படுமென நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தெரிவித்தார். (ஓ-29)

## தீவகத்தில் மிதிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பம்

(ஊர்காவற்றுறை)

ஊர்கர்வற்றுறைப் பிரதேசத்தில் "ஹலோ றெஸ்ற்" நிறுவனத்தின் மிதிவெடி அகற்றும் பணி கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளது.

கடந்த சில மாதங்களாக தீவுப்பகுதி ஊழியர்களுக்கு வேலை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

மீண்டும் அவர்களை மேற்படி நிறுவனம் பணிக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-72)

## சிவராத்திரி தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ அம்மா பகவான் கலச பூஜை நாளை மறுதினம் திங்கட்கிழமை சிவராத்திரி தினமன்று காலை 10 மணிமுதல் 1.30 மணி வரை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் அதனைத் தொடர்ந்து பிற்பகல் 3.30 முதல் 5.30 வரை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையிலும் நடைபெறவுள்ளது.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும் நிகழ்வில் ஸ்ரீ அம்மாபகவான் பாதுகை தரிசனம் இடம் பெறவுள்ளதுடன் மகாதீட்சை பெற்ற அடியாரினால் தீட்சையும் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து பயன் பெறுமாறு ஸ்ரீ கல்கி ஆன்மீக மையத்தினர் கேட்டுள்ளனர். (ஓ-6)

♦♦♦

வட்டுக்கோட்டை-தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மகா சிவராத்திரி உற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி முதல் நான்கு சாமமும் விஷேட அபிஷேக ஆரதனைகள் நடைபெற்று மறுநாள் காலை திருவூஞ்சல் உற்சவத்தை தொடர்ந்து சுவாமி திருவீதியுலா வந்து ஆலய பித்தர் கேணியில் தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் என்.இராமநாதன் குழுவினரின் மங்கள வாத்தியம், ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கோவலன் கண்ணகி நாடகம் மற்றும் கண்ணகி வில்லிசைக் குழுவினர் வழங்கும் அரிச்சந்திர மயான காண்டம் நாடக நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளது. (ஓ-6)

♦♦♦

உரும்பிராய் கிழக்கு கண்ணகா ஸ்ரீ பரமேஸ்வரி கண்ணகை அம்பாள் தேவஸ்தானத்தில் நாளை மறுநாள் திங்கட்கிழமை மாலை 6 மணியில் இருந்து நான்கு ஜாம பூசை வழிபாடுகள் ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை தேவஸ்தான சபையினரால் சிவராத்திரி தினத்தினையொட்டி உரும்பிராய் பகுதி மாணவரிடையே நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிகளுக்கான (பேச்சு, சமயஅறிவு, எழுத்து, பண்ணிசை) பரிசளிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது.

சிறப்பு நிகழ்வுகளாக "இந்துக்கள் பாரம்பரியமாக அனுஷ்டிக்கும் சிவராத்திரி விரதம்" எனும் தலைப்பில் மதுரகவி. காரை.எம்.பி. அருளானந்தனின் சிறப்புச் சொற்பொழிவும், "பக்திகானங்கள்" இசை நிகழ்வு ஆகியனவும் இடம் பெறவுள்ளன. (ஓ)

# நாயுடன் மோதி விபத்துக்குள்ளானவர் சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்களில் சென்று கொண்டிருந்த சமயம் நாயுடன் மோதி விபத்துக்குள்ளாகி காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

ஏழாலையைச் சேர்ந்த அ.பரமநாதன் (வயது 51) என்பவர் கடந்த 12 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் யாழ்.பிரதான வீதியில் சென் சாள்ஸ் மகா வித்தியாலயத்திற்கு அண்மையில் தனது மகனுடன் மோட்பார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது நாய் குறுக்கே வந்து மோதியதால் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் விசேட அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவரே சிகிச்சை பலனளிக்காத நிலை யில் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

எனினும் அவரது மகன் சிறுகாயங்களுடன் தெய்வாதீனமாகக் காப்பாற்றப்பட்டுள்ளார்.உயிரிழந்தவர் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை பொறியியலாளராகக் கடமையாற்றுவதுடன் சுண்டுக்குளி வீடமைப்பு அதிகாரசபை விடுதியில் வதிபவராவார். (ஓ-6)

# கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட எல்லே, வலைப்பந்து, கரப்பந்து போட்டிகளின் முடிவுகளை பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

**எல்லே போட்டி (ஆண்கள்)**

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம், வதிரி டைமன்விளையாட்டுக்கழகம், இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகம்.

**வலைப்பந்துப் போட்டி (பெண்கள்)**

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம், கரவெட்டி சிவகுமாரன் விளையாட்டுக் கழகம், வதிரி பொமேஸ் விளையாட்டுக் கழகம்.

**கரப்பந்துப் போட்டி (பெண்கள்)**

கரவெட்டி சிவகுமாரன் விளையாட்டுக் கழகம், இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகம், மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம். (ஓ-52)

# தென்மராட்சி பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பாடசாலையின் சதுரங்க அணிகளிற்கிடையில் அண்மையில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சதுரங்க சுற்றுப் போட்டியில் 15 வயது ஆண், பெண் இரு பிரிவிலும் மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயமும் 19 வயது ஆண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் பெண்கள் பிரிவில் கச்சாய் அ.த.க. பாடசாலையும் முதலிடத்தினைப் பெற்று சம்பியன் வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டன. முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகள் வருமாறு,

**15 வயதுப் பிரிவு ஆண்கள்**

மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி,மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.

**15 வயது பிரிவு பெண்கள்**

மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்,கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்,கச்சாய் அ.த.க.பாடசாலை.

**19 வயது பிரிவு ஆண்கள்**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம்.

**19 வயது பிரிவு பெண்கள்**

கச்சாய் அ.த.க.பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி. (ஓ-6-29)

## வீதித் தடையால் பொதுமக்கள் பாதிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையம் முன்பாகவுள்ள பிரதான வீதி பல மாதங்களாக மக்கள் போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்டுள்ளது.

இவ்வீதித் தடையால் வைத்தியசாலைக்கு செல்லும் கர்ப்பிணிகள், தாய்மார்கள், கைக் குழந்தைகள் மற்றும் முதியோர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-72)

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுடனான கலந்துரையாடல் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.எஸ்.ஜெகதீசன் அறிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடலில் சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை வழங்கல், புனரமைத்தல், செயற்பாட்டை ஊக்குவித்தல் போன்ற விடயங்கள் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-29)

## செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இன்று நடைபெற இருந்த தரம் 10,11 ஆகிய வகுப்புகளுக்கான வணிகமும் கணக்கீட்டு கல்விக்கான செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

இச் செயலமர்வில் தரம் 10,11ற்கான முயற்சியாண்மை கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை கலந்துகொள்ளுமாறு வடமராட்சி கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அதிபர்களை கேட்டுள்ளார். (ஓ-19)

## தொழில் முன்னேற்றக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சிறிய, நடுத்தரக் கைத்தொழில் மற்றும் சுயதொழில் முயற்சியாளர்களுக்கான தொழில் முன்னேற்றக் கருத்தரங்கு எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சுண்டுக்குளி கைத்தொழில் அபிவிருத்திச் சபை மாவட்டக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இலவசமாக நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் தரம் வாய்ந்த ஐஸ்கிறீம் தயாரித்தலும் ஏற்படும் பிரச்சினைகளும் தீர்வும் எனும் விடயம் பற்றி கலந்துரையாடப்படவுள்ளதுடன் விளக்கக் குறிப்புகளும் வழங்கப்படவுள்ளது.இதில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு யாழ். கைத்தொழில் அபிவிருத்திச் சபை உதவிப் பணிப்பாளர் ஆர்.ஜெயமனோன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ-6)

## அற்புத திருப்பதிகங்கள் ஓதும் நிகழ்வு

(காரைநகர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலயத்தில் சிவராத்திரி தினமன்று மாலை 5 மணிக்கு சம்பந்தர் சுவாமிகள், அப்பர் சுவாமிகள், சுந்தரர் சுவாமிகள் அருளிய அற்புதத் திருப்பதிகங்கள் ஓதப்படவுள்ளதாக மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை அறிவித்துள்ளது. (ஓ)

## தொழில் திறன் இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

2008 ஆம் ஆண்டிற்கான தொழில்சார் இறுதிப் பரீட்சை 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறும் என யாழ். கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஓ-7)

## மெய்வல்லுநர் போட்டி

(பருத்தித்துறை)

வடமராட்சி கரவெட்டி சரஸ்வதி மகளிர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் எஸ்.செல்வானந்தன் தலைமையில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இலங்கை மெதடிஸ்த திருச்சபை பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக் குரு அருட்திரு.ந.அருள்நாதன் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இம் மெய்வல்லுநர் போட்டியில் வெற்றியீட்டும் வீரர்களுக்கான பரிசில்களை திருமதி. எலிசபெத் வலன்ரீனா அருள்நாதன் வழங்குவர். (ஓ-52)

## சட்டமாணி கற்கைநெறிக்கான ஆங்கில மீள் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்தியத்தில் நடைபெறும் சட்டமாணி கற்கை நெறிக்கான ஆங்கில மீள் பரீட்சை இன்றும் நாளையும் யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். திறந்த பல்கலைக்கழக இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## தீக் காயங்களுக்குள்ளான பெண் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணெய் ஊற்றி அடுப்பு மூட்டிய வேளை தீ பற்றியதில் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த ஜெயமாலினி (வயது 28) என்பவரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளவர் ஆவார். (ஓ-7)

## கொமிர்சியக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

யாழ்.மறை மாவட்ட புனித-மரியாயின் சேனையின் மாதாந்த கொமிர்சியக் கூட்டம் மார்ச் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்-மறைக் கல்வி நடுநிலைய ஒன்றுகூடல் மண்டபத்தில் ஆன்மீக இயக்குநர்-அருட்திரு.றெஜி இராஜேஸ்வரன் அடிகள் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-72)

## ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ இராமகிருஷ்ணரின் ஜெயந்தி விழா 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு யா/வைத்தீஸ்வராக் கல்லூரியில் அதிபர் நா.வன்னியசிங்கம் தலைமையில் கொண்டாடப்படவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக சிவ மகாலிங்கம் கலந்துகொண்டு இராமகிருஷ்ணரின் வாழ்வியல் தத்துவங்கள் எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார். அன்றைய தினம் மாணவர்களின் பஜனை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ஓ)

# இலங்கையில் தமிழர் 77

## ஹெள மக்களும் தமிழ் மக்களும் பொ.ஆ.300-900

ஐந்தாம் நூற்றாண்டின் முற்பாதியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை நோக்கினால் தமிழர் செல்வாக்கு எந்தளவுக்கு அனுராதபுரத்தின் அரச சபையில் வளர்ந்திருந்தது என்பதைக் காணலாம். அனுராதபுரத்தின் மன்னனாக 406 இல் மஹாநாம என்பவன் பதவியேற்றான். அவனுடைய அரசியருள் ஒருத்தி தமிழ்ப் பெண். இவ்வாறு ஒரு தமிழ்ப் பெண்ணை மணம் முடித்தமைக்கு அம் மன்னன் தமிழ் உயர் குழாத்துக் குடும்பங்களுடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தமை அல்லது தமிழ் நாட்டு அரச குடும்பம் ஒன்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமை காரணமாகலாம்.

எவ்வாறாயினும், மன்னனுடைய தமிழ் அரசி பெற்றிருந்த செல்வாக்கும் அரச சபையில் தமிழ் உயர் குழாத்தினர் பெற்றிருந்த செல்வாக்கும் குறிப்பிடத்தக்கதாக இருந்திருக்க முடியும் என்பதையும் தமிழ் சிங்கள வேறுபாடு இல்லாத அரசியல் நிலை காணப்பட்டது என்பதையும் வெளிப்படுத்தும் வகையில் மன்னன் இறந்தபோது நடைபெற்ற நிகழ்ச்சிகள் அமைகின்றன.

மஹாநாம மன்னன் 428 இல் இறந்தபோது புதிய மன்னனாகப் பதவியேற்றவன் தமிழ் அரசிக்குப் பிறந்த சொத்திஸேனன் என்பவன். ஆனால் அவன் ஆட்சியேற்றதும் அரசியல் குழப்பங்கள் நிகழ்ந்து ஸொத்திஸேனன் கொல்லப்பட்டு, ஒருவர் பின் ஒருவராக மூன்று மன்னர்கள் ஓராண்டுக் காலத்தில் பதவியேற்றதைக் காணலாம். இக் குழப்ப நிலையில் பண்டு என்ற ஒருவன் ஆட்சியைக் கைப்பற்றி அனுராதபுரத்தின் மன்னனாக ஆண்டான் என்று பாளி வரலாற்று நூல்களால் அறிகின்றோம்.

பாளி மொழியில் பண்டு என்ற பெயர் பாண்டியரைக் குறிக்கும். ஆகவே, இவ்வாறு ஆட்சி பெற்றவன் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்தவன் என ஊகிக்க இடமுண்டு. இக் காலத்துத் தமிழ்நாட்டு அரசியல் பின்னணியை நோக்கினால், அங்கு களப்பிரர் என்ற குழுவினர் பாண்டி நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றிப் பாண்டியரை ஆதிக்கத்திலிருந்து நீக்கினர் என்று அறியக் கிடக்கின்றது. இச் சூழ்நிலையில் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்த சிலர் அனுராதபுரத்துக்கு வந்திருக்கலாம். மஹாநாம மன்னனின் தமிழ் அரசி பாண்டிய வம்சத்தைச் சேர்ந்தவளாக இருந்திருந்தால், அத் தொடர்பாலும் பாண்டிய வம்சத்தவர் அனுராதபுரத்தில் ஆட்சி பெற வாய்ப்பு ஏற்பட்டிருக்கலாம். இது எவ்வாறாயினும் 429 அளவில் தமிழ் மன்னன் ஒருவனுடைய ஆட்சி தொடங்கியது என்பதை வரலாற்று மூலாதாரங்கள் எடுத்துரைக்கின்றன.

இப் பாண்டிய மன்னனும் அவனுடைய வழித்தோன்றல்களும் அடுத்த கால் நூற்றாண்டுக் காலமாக (429-455) அனுராதபுரத்தை ஆண்டனர். இம் மன்னர்கள் சிங்கள மன்னர்கள் போலவே அனுராதபுரத்து மரபுகளின்படி ஆண்டனர் எனத் தெரிகின்றது.

இவர்கள் பௌத்தர்களாகவும், பௌத்தத்தை ஆதரிபோராகவும், ஹெள (ஆதிச் சிங்கள) மொழியைத் தம் கல்வெட்டுக்களில் பயன்படுத்தியோராகவும் ஆண்டனர் என்பதற்குச் சான்றுண்டு. கால் நூற்றாண்டுக் காலம் ஆட்சி நடத்த முடிந்தமை அவர்கள் ஆட்சி ஏற்றுக்கொள்ளப்பட்டதற்குச் சான்றாகும்.

முதலில் ஆண்ட பண்டு மன்னன் பற்றி அறிய அதிக சான்றில்லை. அவனுடைய உண்மைப் பெயர் கூடப் பேணப்படவில்லை. அவன் ஐந்து ஆண்டுகள் ஆட்சி நடத்திய பின் அவனுடைய மகன் பதவியேற்றான். இவன் பெயர் பாளியில் பாரிந்த எனக் கொடுக்கப்பட்டுள்ளது. ஹெள மொழியில் இது பரிததேவ எனக் காணப்படுகின்றது. இப் பெயரை சமஸ்கிருதத்தில் பாரீந்திர தேவ எனவும் தமிழில் பாரிந்திரதேவன் எனவும் கூறலாம். இவன் ஒரு பௌத்தனாக இருந்தான். இவன் பௌத்த பள்ளி ஒன்றுக்கு அளித்த தானம் பற்றிய செய்தி ஒரு ஹெள மொழிக் கல்வெட்டில் உள்ளது. இவன் மூன்று ஆண்டுகள் மட்டுமே ஆட்சி புரிந்தான். அவனுக்குப் பின் அவன் தம்பி இளம் பாரிந்திரன் பாரிதேவன் (ஹெள மொழியில் ள-பரிதேவ) பதவியேற்றான்.

இளம் பாரிந்திரன் தமையனைப் போன்று ஒரு பௌத்தனாக ஆட்சி நடத்தியதுடன், முன் ஆண்ட சிங்கள மன்னர் கொண்டிருந்த விருதாகிய புத தஸ (புத்ததாசன்) என்ற விருதையும் ஏற்றிருந்தான். இவனுடைய அரசி பௌத்த பள்ளி ஒன்றுக்கு வழங்கிய தானம் பற்றி ஒரு ஹெள மொழிக் கல்வெட்டில் தகவல் கிடைக்கின்றது.

பேராசிரியர்
கா. இந்திரபாலா

இளம் பாரிந்திரனுக்குப் பின் மூன்று தமிழ் மன்னர் சிறு சிறு காலப் பகுதி அனுராதபுரத்தில் ஒரு வர் பின் ஒருவராக ஆண்டனர்.

பாளி வரலாற்றேடுகள் இவர்களைப் பற்றி அதிகம் தகவல்களைத் தரவில்லை. ஆனால் இவர்களுள் இருவரைப் பற்றி குறிப்பிடும் ஒரு ஹெள மொழிக் கல்வெட்டு கிடைத்திருப்பது கவனிக்கத்தக்கது. (தொடரும்)



மாகாண மட்ட நாட்டுக்கூத்துப் போட்டியில் முதலிடம் பெற்ற கைதடி நாவற்குழி அ.த.க.வித்தியாலய மாணவர்களின் "இராவணேசன் நாட்டுக்கூத்து" அண்மையில் யாழ்.மாவட்டக் கலாசாரப் பேரவையினால் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது. போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுடன் பாடசாலை அதிபர் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரவுரையாளர் க.இ.கமலநாதன் மற்றும் நாடக ஆசிரியர் ஆகியோர் காணப்படுகின்றனர்.




யா/சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் வருட ந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்துகொண்ட வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன், வித்தியாலய அதிபர் ரி.ஞானப்பிரகாசம், புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை ஆர்.எக்ஸ்.நேசராஜா அடிகளார், குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி முன்னாள் தலைவர் கி.கிறிஸ்தோபர் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# சுதேச நாட்டியம் பத்திரிகையும் [1902-1915]

# கல்லடி வேலனும் 16

எனினும், அவரது பத்திரிகையின், ஆரம்ப காலத்தில் அரசியலுடன் தொடர்பான விடயங்கள் பற்றிய சில எடுத்துக்காட்டுக்களைப் பற்றிக் குறிப்பிடலாம். பிரித்தானிய காலனித்துவத்தின் கீழான யாழ்ப்பாணத்தவர் மத்தியில் காணப்பட்ட, அரச விசுவாசம், பிரித்தானியரின் ஆட்சி தமக்குக் கிடைத்தமை வரப்பிரசாதம் என்ற எண்ணம், பிரித்தானிய காலனித்துவ அலுவலர்களையும், அவர்களது நடவடிக்கைகளையும் சிலாகித்தல் ஆகிய பண்புகளை இவரது பத்திரிகைக் குறிப்புரைகள் காட்டுகின்றன. அவற்றிற்கு உதாரணங்களாகப் பின்வரும தரவுகளைக் காட்டலாம்.

டில்லி தர்பார்- '...தர்பார் என்பது சமூகமளித்தல் அல்லது வணக்கஞ் செலுத்துதல் என்னும் பொருள் பொதியப் பெற்ற பார்சிய பாஷைப் பதம். பிரித்தானிய அரசர் நமது வணக்கத்திற்குரிய இராச சக்கரவர்த்தி என்னும் மதிப்பைக் காட்டும் நோக்கதற்திற்காகவே, இந்திய இராச்சியத்தவர் இந்தக் கொண்டாட்டத்தை வழமையாய் நடப்பித்து வருகின்றனர்... இந்தியாவில் தர்பார் முதன் முதலில் லிற்றன் பெருமான் பிரதிகாவலாயிருந்தபோது 1877 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அப்போது விக்ரோறியா மகாராணியவர்கள், இந்திய சக்கரவர்த்தியெனக் கூறப்பட்டார்கள்...' (சு.நா.18.12.1911)

ஏசன்றரின் சுற்றோட்ட நிருபம்-வட மாகாண ஏசண்டராய் தன்னுயிர் போல் மன்னுயிரோம்பும் சுகுண லட்சணங்கமைந்து, தாரகாகணச் சந்திரனெனத்துலங்கி யாழ்ப்பாணத்தார் மத்தியில் விளங்கும் எங்கள் ஏசன்றர் கனம் பிறீமன் துரையவர்கள் யாழ்ப்பாணக் கிருஷிகவிஷயமாய் மணியகாரான்மாருக்கு அறிக்கை செய்திருக்கின்றனர்.

அதில் யாழ்ப்பாணப் புகையில்யிலதிகம் மலையாளப் பகுதிக்குத் தேவையில்லாதிருப்பதால், இனி யாழ்ப்பாணத்திலே புகையிலையை அதிகமாக உண்டாக்கல் புத்தியில்லவென எச்சரித்து, அந் நிலங்களில் வேறெதும் பலன்தரும் பயிர்களை கமக்காரர் செய்தல் உத்தமமெனக் காட்டியிருக்கின்றனர். என்ன தண்ணளி! (சு.நா. 18.08.1911)

எனினும் அரசாட்சியரின் செயற்பாடுகள் சில, மக்களுக்குப் பாதகமானதாக இருப்பதை இவர் தனது பத்திரிகையில் சுட்டிக் காட்டி எழுதுவதற்கும் தயங்கவில்லை. க.வேயின் இயல்பான எள்ளல் கலந்த வகையில் எழுதப்பட்ட பின்வரும் பகுதியை நோக்கலாம்.

'ரயில் வண்டிகளிலே 3ஆம் வகுப்பாருக்கு அமைக்கப்பட்டிருக்கும் பெட்டிகளிலே மேற்பலகைகளில் 12 சனங்களுக்கு என்றெழுதி... சனங்களதிகப்படும் போது அரசாட்சியார் லாபம் போய்விடுமென்று நெருப்புப் பெட்டிக்குள் குச்சடுக்கிய விதமாய், பெயரப்பிரிய, மூச்சுவிட, வசதியின்றிச் சனங்களை இழுத்துப் போட்டு அடைத்து விடுகிறாரென்றும், 1 -ம், 2-ம் வகுப்பு வண்டியிலிருக்கிறவர்களை மனுஷரென்றும், 3ம் வகுப்பு வண்டியிலிருக்கிறவர்களை, மரந்தடிகள் அல்லது மிருகங்களென்றும் அரசாட்சியுத்தியோகரெண்ணியிருக்கிறார்களென்றும் ஒருவர் வினவுகிறார்.

ரயில் வண்டியில் 1-ம், 2-ம் வகுப்பு வண்டியிலேறுகிறவர்களுக்கு மலசலங்கழிக்க இடம் அமைக்கப்பட்டிருக்கிறதென்றும், 3ஆவது வகுப்பு வண்டியில் ஏறுகிறவர்களுக்கு அப்படியமைக்கப்படவில்லையென்றும், இவர்களுக்கு அப்படியொன்றை அமைத்து விடாததால் இவர்களை மலசலமில்லாத மலமுத்தர் என்று அரசாட்சியாரெண்ணியிருக்க வேணுமென்றும் ஒருவர் சொல்ல, அதற்குத்தரமாய் வேறொருவர் ஓ! ஸ்ரேசன்கள் ஒவ்வொன்றிலும் புகையிரதப் பயணக்காரருக்காயல்லவா மலசலகூடம் கட்டப்பட்டிருக்கிறது. மூன்றாம் வகுப்புக்காரார் அங்கேயிறங்கியிருக்கலாமேயென்க. முந்தியவர் இவர் கூறியதை மறுத்து மூன்று வகுப்பார் போல் முதலாம் இரண்டாம் வகுப்பாரும் இறங்கி அப்படி மலசலகூடங்களில் மலசலங் கழிக்கில் இவர்களுக்கு மலசலம் போகாதா? இரண்டு ஸ்ரேசனுக்குமிடையில் மூன்றாம் வகுப்பில் இருக்கிறவர்களுக்குக் காத்திராத படி மலசல வேதையுண்டுபட்டால், அவர்கள் கட்டியிருக்குங் சால்வை வேட்டிகளில் கழித்து, வெளியில் வீசுகிறதா என்று பரிகாசம் பண்ணுகிறார்' (சு.நா.12.07.1909)

பிரித்தானிய காலனித்துவ அரசாங்கத்தைக் கௌரவமாகக் கருதியிருந்த, யாழ்ப்பாணத்தவர், பிரித்தானிய கீழ்நிலைப் பதவி வகித்தவர்களையெல்லாம் மதிக்கவும் மரியாதை செய்யவும் உடன்பட்டவர்கள் எனக் குறிப்பிட முடியாது. இதற்கு பல சான்றுகளைக் காண முடியும். க.வே.யும் அத்தகய ஒரு சம்பவத்தை எழுதிக் கிண்டல் செய்திருப்ப தைக் காண முடிகின்றது. 'வெள்ளை ந் தோலுக்கு (சேர் ) பட்டம் வேண்டுமாம்! 'என்ற தலைப் பில், எழுதப்பட்டிருந்த சம்பவக் குறிப்பு இதற் குச் சிறந்த உதாரணமாக அமைகிறது. கல்லடியானின் இந்தச் செய்தியில் வெள்ளையர்களின் மேலாதிக்க எண்ணத்தைச் சாதிக்க மாட்டாத ஆவேசம் தென்படுகிறது. (சு.நா. 1.06.1908)

திருமதி.சோ.கிருஷ்ணகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

### சுதேச நாட்டியமும் அக்கால சமூகமும்

சமயத்துறையில் நடுநிலை கைக்கொள்ள முற்பட்ட கல்லடியான், சமூக விடயங்களில் ஆக்ரோஷம் மிக்க பார்வையைக் கொண்டவராக விளங்கியிருந்தார். சமூகம் பற்றிய அவரது கருத்து நிலை சமூக உயர் வகுப்பாரின் போலித்தனங்களுக்கு எதிரானதாகவும், நீதி, நேர்மை, தயவு, தாராண்மை ஆகியவற்றை வலியுறுத்தல் என்பதாகவும் வைதிக சமூக அடிப்படையை வலியுறுத்துவதாகவும் உள்ளது. (தொடரும்)

## மகா சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் சிவராத்ததிரி தின நிகழ்வுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி மறு நாள் அதிகாலை 5.30 மணிக்கு நிறைவு பெறும்.

நிகழ்வுகள் ஓம்காரம், காயத்திரி , பிரசாந் திக் கொடியேற்றம்,வேதபாராயணம் ஆகிய வற்றுடன் ஆரம்பமாகி முன் இரவு 7,9,12 மற்றும் பின் இரவு 3 மணி ஆகிய நேரங்க ளில் நான்கு ஜாம சிவ அஷ்டோத்திரம் மற்றும் வில்வ அர்ச்சனையும் இடம்பெறு வதுடன் தொடர்ந்து திருமுறை ஓதுதல் பஜனை ஆகியவையும் இடம்பெறும். (ஓ)

❖❖❖

(பருத்தித்துறை)

கோப்பாய் ஸ்ரீ சாந்திலிங்கேஸ்வரர் ஆலய பாற்குட அபிஷேகமும் மகா சிவராத் திரி விழாவும் நாளை மறுதினம் திங்கட் கிழமை நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஸ்ரீ கற்பகப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து காலை 9 மணிக்கு பாற்குட ஊர்வலம் விசேட பூசைகளுடன் ஆரம்பமாகும்.

பக்த அடியார்களின் பாற்குட ஊர்வலம் பகல் 11 மணியளவில் ஸ்ரீசாந்தி லிங்கேஸ் வரர் ஆலயத்தைச் சென்றடையும். அதனைத் தொடர்ந்து ஸ்ரீசாந்திலிங்கேஸ் வரப் பெரு மானுக்கு பாலாபிஷேகம் நடை பெறும். இரவு நான்கு சாமமும் அபிஷேகம், விசேட பூசைகளும் நடைபெறவுள்ளது. (ஓ-52)

❖❖❖

(கைதடி)

கைதடி தெற்கு நவனியாவத்தை ஞான வைரவர் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினமான நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை முதல் மறுநாள் அதிகாலை நான்கு சாமப் பூசைகள் இடம்பெறுவதோடு தேவார பண்ணிசை மற்றும் பஜனை நிகழ்வுகள் இடம்பெறும். (ஓ-21)

❖❖❖

(கைதடி)

கைதடி நாவற்குழி பெரும்படையம்மன் மற்றும் மகாவிஸ்ணு ஆலயங்களில் மகா சிவராத்திரி தினத்தன்று நான்கு சாமப் பூசைகள் இடம்பெறவுள்ளதோடு தேவார பஜனை நிகழ்வுகள் மற்றும் பாரம்பரிய முறையிலான பொங்கல் நிகழ்வுகள் இடம் பெறும். (ஓ-21)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக சொற் பொழிவுத் தொடரில் நாளை ஞாயிற்றுக் கிழமை 10 மணி பூசை முடிவுற்றதும் 'வல்லி புரம்' என்னும் பொருள் பற்றி மணற்காடு றோ.க.த.கலவன் பாடசாலை ஆசிரியர் பி.பாலமுரளி ஆன்மீக சொற்பொழிவாற் றுவார். (ஓ-35)

## காங்கேசன்துறைமுகத்தில் பொருட்களை ஏற்றி இறக்கும் பணியாளர்களுக்கு தொற்றுநோய்

(யாழ்ப்பாணம்)

யாழ்.காங்கேசன்துறைமுகத்தில் பொருட் களை ஏற்றி இறக்கும் பணிகளில் ஈடுபடும் தென்னிலங்கை கைதிகள் தொற்று நோய் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக யாழ்.சிறைச் சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயமான காங்கேசன் துறைமுகத்தில் பொருட்கள் ஏற்றி இறக்கும் பணிகளுக்கு தென்னிலங்கையில் தண்ட னை பெற்ற கைதிகள் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த வாரப் பகுதியில் தொற்று நோய் பாதிப்புக்குள்ளானமை குறித்து யாழ். சிறைச்சாலை அத்தியட்சகரின் கவனத்திற் குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இவ்வாறான தொற்றுநோய் பாதிப்புக் குள்ளான கைதிகளை விமானப் படையி னரின் விமானம் மூலம் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை மேற் கொள்ளப்பட்டு வருவதுடன் சிகிச்சையின் பின்னர் தென்னிலங்கை சிறைச்சாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். குடாநாட் டிற்கான தரைவழிப் பாதையான ஏ-9 வீதி மூடப்பட்ட பின்னர் குடாநாட்டிற்கான அனை த்துப் பொருட் களும் கடல்வழியாகவே கொண்டு வரப்படு கின்றன.

இவ்வாறு கொண்டுவரப்படும் பொருட் கள் உயர்பாதுகாப்பு வலயப் பகுதியான காங்கேசன்துறை , மயிலிட்டி போன்ற துறை முகங்களில் இறக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான பணிகளை செய்வதற்காக தென்னிலங்கை சிறைச்சாலைகளில் தண் டனை பெற்ற கைதிகள் யாழ்.குடாநாட்டிற்கு கொண்டு வரப்பட்டு இத்தகைய பணிகளை செய்வதற்கு அமர்த்தப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஓ-5)

## நல்லை ஆதீன முதல்வரின் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சைவசமய மக்களின் அதிவிசேட விரத தினமாகிய நாளை மறுதினம் திங்கட்கிழமை மஹாசிவராத்திரி நன்னாளில் சகல இந்துக் களும் ஒன்றிணைந்து ஒருமித்து இந்த நாட்டில் பூரண அமைதியும் நிரந்தர சமாதானமும் ஏற்பட்டு அனைத்து மக்களும் சந்தோஷமும் சுபீட்சமும் அடைந்து மங்கள கரமாக வாழவேண்டும் என்று ஏகோபித்த பிரார்த்தனையைச் செய்துகொள்ளுமாறு அன்போடு வேண்டுகோள் விடுக்கின் றோம்.

மகாசிவாரத்திரி நாள் விரதம் முறையாக அனுட்டித்து சகல சௌபாக்கியங்களையும் பெற்று எம்பெருமானின் திவ்ய பேரருட் கடாட்சத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள் கின்றோம். (ஓ)

## ஸ்ரீ அம்மா பகவான் பாதபூஜை நிகழ்வு

காரைநகர் கோவளம் தர்மராசா சூரிய குமாரின் இல்லத்தில் ஸ்ரீ அம்மா பகவான் பாதபூஜை நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை சுழிபுரம் சற்சங்க உறுப்பினர் செல்வி சிவலிங்கம் சிவவேணியால் நடாத்தப்பட வுள்ளது. (ஓ)

## மஹோற்சவம்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதி திருவருள் மிகு ஸ்ரீ சிவ மஹாகாளி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவம் நாளை மறு தினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறவுள்ளது.

இம் மஹோற்சவத்தில் முதல் ஐந்து நாட்களும் விநாயகர், சுப்பிரமணியருக்கும் மிகுதி பத்து நாட்களும் அம்பாளின் மஹோற் சவமும் நடைபெறும்.

தினமும் மாலை இலட்சார்ச்சனை நடை பெறும்.

மார்ச் மாதம் 6 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 7 ஆம் திகதி சப்பறமும், 8 ஆம் திகதி காலை10.30 மணிக்கு இரதோற் சவமும் 9 ஆம் திகதி காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறும். (ஓ)

## அதிகரித்துவரும் சட்டவிரோத செயல்கள்

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதே சத்தில் சட்டவிரோத செயல்கள் மீண்டும் அதிகரித்துள்ளது. இடம்பெயர்ந்தோர் வீடுக ளுக்குச் சென்று, அரச அனுமதியின்றி மரங்கள் வெட்டுதல், பசுமாடு கடத்தி அனுமதியின்றி வெட்டி இறைச்சியாக்குதல், இளம் யுவதிகளைக் கடத்தல், பிக் பொக்கெற் அடித்தல் போன்ற செயல்கள் அதிகரித்துள் ளன. (ஓ-72)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(சாவகச்சேரி)

சாவக்சேரி இந்துக்கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி மைதா னத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்வி அதிகாரி ந.சத்தியநாதன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்.வலயக் கல்வி அலுவலக கணக்காளர் கே.கமலரூபன் கலந்து சிறப்பிக்கவுள் ளார். (ஓ-29)

## தாச்சி சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம், இலங்கை வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் மயிலிட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டி சுன்னாகம் தெற்கு ஒற்றுமை விளையாட்டுக் கழக மைதானத் தில் நடைபெற்று வருகிறது.

இப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு சிந்து விளையாட்டுக்கழகம் எதிர் அண்ணா விளையாட்டுக்கழகமும் பிற்பகல் 4 மணிக்கு ஈஸ்வரி விளையாட்டுக்கழகம் எதிர்வைகறை விளையாட்டுக்கழகமும் நாளை பிற்பகல் 3 மணிக்கு யுவசக்தி விளையாட்டுக் கழகம் எதிர் புவனேஸ்வரி அம்பாள் பி விளையாட்டுக்கழகமும் பிற்பகல் 4 மணிக்கு புவனேஸ்வரி அம்பாள் ஏ விளையாட்டுக் கழகம் எதிர் கண்ணகி பி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ஓ)

## 'ஞானச்சுடர்' வெளியீட்டு விழா

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வசந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதி யான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் மாதம்தோறும் வெளியிடப் படும்'ஞானச்சுடர்' மாசிமாத வெளியீடு 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 10.30 மணி யளவில் வெளியிடப்படும்.

இதன் வெளியீட்டுரையை இளைப்பா றிய ஆசிரியை திருமதி புனிதவதி சண்முக லிங்கமும் மதிப்பீட்டுரையை யாழ். பல் கலைக்கழக முதுநில்ல விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும் நிகழ்த் தவுள்ளனர். (ஓ-35)

## யாழ் செய்திகள்

## நமது உறவுகளுக்காக பிரார்த்திப்போம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் நமது ஈழத் திருநாட்டில் அல்லல் உற்று அவல வாழ்க்கை வாழ்கின்ற எம் உறவுகள் அல்லல் நீங்கி நிரந்தர சாந்தி, சமாதானத் தோடு நிம்மதியாக வாழவேண்டுமென்பதற் காக யாழ்.குடாநாட்டு ஆலயங்களில் மகா சிவராத்திரி தினமான 23ஆம்திகதி திங்கட் கிழமை காலை 8 மணி முதல் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30 மணி வரையும் பன்னிருதிருமுறை பாராயணம் வழிபாடு செய்து பிரார்த்திக்கவுள்ளனர்.


அன்றைய தினம் யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை பலாலிவீதி, கந்தர்மடம் ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோயிலில் சிவராத் திரி தின முதலாம் சாம விடேச அபிசேகப் பூசை யைத் தொடர்நது இரவு 8 மணி தொடக்கம் நாலாம் சாமப் பூசை நிறை வடையும் அதிகாலை 4.30 மணி வரையும் பன்னிரு திருமுறை பாராயணம் இடம்பெற வுள்ளது.

சைவத்தமிழ்மக்கள், அடியார்கள், பண்ணிசை விற்பன்னர்கள், இசைவல்லார் கள் அனைவரும் பங்குபற்றி பிரார்த்தனை செய்யுமாறும் தங்கள் தங்கள் இல்லங்கள் சமய நிறுவனங்களில் இருந்தவாறும் வசதி யைப் போல் இப் பிரார்த்தனையில் ஈடுபட லாமெனவும் அகில இலங்கைத் திருமுறை மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

## விசேட கல்விச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தெரிவுசெய்யப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான விசேட கல்விச் செய லமர்வு இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் காலை 8 மணி தொடர்பாக 4மணிவரை நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (ஓ-7)



யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை குணபாடப்பிரிவு, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடத்திய மூலிகை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கில் சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் திருமதி வியின் சத்தியசீலன் மூலிகை தொடர்பாக விளக்கமளிப்பதையும், சாவகச்சேரி ஆயுர்வேத சமூக மருத்துவ உத்தியோகத்தர் டாக்டர் ஆனந்தஜோதி விஜயகுமார் அமர்ந்திருப்பதையும், சித்த மருத்துவ மாணவர்கள் அருகில் நிற்பதையும், கருத்தரங்கில் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# இலங்கை தமிழர்களை பாதுகாக்க மத்திய அரசு தவறிவிட்டது

## தா. பாண்டியன் தெரிவிப்பு

(ஸ்ரீவில்லிபுத்தூர்)

இலங்கை தமிழர்களைப் பாதுகாக்க மத்திய அரசு தவறிவிட்டது என இந்திய கம்யு. மாநில செயலாளர் தா. பாண்டியன் ஸ்ரீ வில்லிபுத்தூரில் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

1960 முதல் பல முறை ஆட்சி செய்த திமுகவால் இலங்கை தமிழர்களின் கொலையை இது வரை தடுக்க முடியவில்லை. தற்போது மத்திய அரசில் அங்கம் வகித்தும் தி.மு.க.வால் அதனைத் தடுக்க முடியவில்லை.

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கையில் போரை நிறுத்துமாறு வற்புறுத்த முடியாது என்று கூறிவிட்டார்.

இதற்கு பின்பும் தமிழக கட்சிகள் மத்திய அரசில் இருக்க வேண்டுமா என்பதை அங்கம் வகிக்கும் கட்சிகள் முடிவு செய்ய வேண்டும். இலங்கை தமிழர் பிரச்சினையில் இளைஞர்கள் தீக்குளித்து தற்கொலை செய்து கொள்வதை இந்திய கம்யூனிஸ்ட் விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ஓ-5)

# தமிழ்நாட்டு ஊடகங்களின் ஈழ ஆதரவு குரலானது அம் மக்களின் உணர்வுக் குரல்

## “நக்கீரன்” வார இதழாசிரியர் கோபால்

“தமிழ்நாட்டு ஊடகங்களின் ஈழ ஆதரவுக் குரலானது தமிழ்நாட்டு தமிழர்களின் உணர்வுக்குரல்” என்று வாரமிருமுறை வெளிவரும் ‘நக்கீரன்’ வார இதழின் ஆசிரியர் கோபால் தெரிவித்துள்ளார்.

‘நக்கீரன்’ இதழுக்கு இலங்கையின் துணைத் தூதுவர் அம்சா மிரட்டியது தொடர்பாக அவுஸ்ரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஒலிபரப்பாகிய “செய்தி அலைகள்” நிகழ்ச்சிக்கு கோபால் வழங்கிய நேர்காணலில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

“சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் ஒரு கருத்துக்கணிப்பினை நடத்தினர். இலங்கை இனப்பிரச்சனையில் எந்தளவுக்கு இலங்கை அரசும் அதன் இராணுவமும் தமிழ் மக்களை ஈவிரக்கமின்றி நாசப்படுத்தி வருகின்றன என்பது தொடர்பில் அந்த கருத்துக் கணிப்பு இடம்பெற்றது.

மக்கள் ஆதரவில் நடத்தப்பெற்ற இக்கருத்துக் கணிப்பில் ஒட்டு மொத்த தமிழ் மக்களும் தங்களின் அடிமனதிலிருந்து வெளிவந்த குரலைப் பதிவு செய்திருக்கின்றனர்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு குரல் எழுப்புவது என்பதுதான் ஊடகத்துறையில் இருக்கின்ற எங்களால் முடிந்த பணியாகும். மக்கள் எழுதுகின்ற ஒன்றைத்தான் நாங்கள் அச்சுப் பிரதியாக கொண்டு வருகின்றோம்.

தங்களின் தொப்புள் கொடி உறவுகள் கொல்லப்படுவதை தொடர்ந்து அவதானித்து வருகின்ற நிலை மக்களிடையே காணக்கூடியதாய் இருக்கின்றது.

இது ஓர் எழுச்சி. 1983ஆம் ஆண்டு ஏற்பட்ட எழுச்சியை விட பல மடங்கு மிகப் பெரிய எழுச்சி இது. இது ஈழத் தமிழர்களுக்கு நல்லதொரு விடிவைக் கொண்டு வரும். நம் குடும்பத்தில் நடப்பது போன்றதான ஒரு சோகத்தை நாம் எப்படிப் பகிர்ந்து கொள்கிறோமோ அந்தளவிற்குத்தான் அவர்கள் உறவுகளைப் பகிர்ந்து கொண்டிருக்கின்றனர் என்றார் அவர். (ஓ-6)

# ஜெயலலிதா விடுத்த அழைப்பை காங்கிரஸ் கட்சி நிராகரிப்பு

(புதுடில்லி)

காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொள்வது குறித்து அதிமுகவிடமிருந்து எந்த திட்டமும் வரவில்லை என்று காங்கிரஸ் கட்சியின் மேலிட பார்வையாளர் வீரப்ப மொய்லி கூறியிருக்கிறார்.

திமுகவுடனான காங்கிரஸ் கூட்டணி வலுவாக இருக்கிறது என்றும் அவர் கூறினார். திமுக கூட்டணியிலிருந்து காங்கிரஸ் கட்சி வெளியேற வேண்டும் என்று அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதா நேற்று முன்தினம் பகிரங்க அழைப்பு விடுத்தார்.

இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோர் காலத்தில் அதிமுகவுடன் நெருக்கமான உறவை கொண்டிருந்ததை சுட்டிக்காட்டி, பழைய நண்பர் என்ற முறையில் இந்த வேண்டு கோளை விடுப்பதாக ஜெயலலிதா கூறியிருந்தார். ஜெயலலிதாவின் இந்த அழைப்பு அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதுகுறித்து மூத்த காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான வீரப்ப மொய்லியிடம் கருத்து கேட்கப் பட்டபோது, அதிமுகவிடமிருந்து கூட்டணி குறித்து எந்த முறையான திட்டமும் வரவில்லை. ஆனால் தமிழகத்தில் திமுக, பாமக வுடனான கூட்டணி தொடர்ந்து வலுவான நிலையில் இருப்பதாக அவர் கூறினார்.

ஜெயலலிதாவின் இந்த அழைப்பு குறித்து தற்போது அதிமுகவுடன் கூட்டணி ஏற்படுத்தியிருக்கும் மார்க்சிஸ்ட் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களிடமும் கருத்து கேட்கப்பட்டது.

ஜெயலிதாவின் இந்த கருத்து தற்போது அதிமுகவுடன் ஏற்பட்டுள்ள கூட்டணிக்கு எந்த விதத்திலும் உதவிகரமாக இருக்காது என்று மார்க்சிஸ்ட், கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் என். வரதராஜன் கூறினார்.

ஜெயலலிதாவின் இந்த அழைப்புக்கு எத்தகைய உள்நோக்கம் இருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியாது. ஆனால் நாங்கள் எங்கள் கட்சியின் தேசியத் தலைவர்களுக்கு இது குறித்து தெரிவித்திருக்கிறோம் என்று அவர் கூறினார்.

மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் இது பற்றி விவாதிக்கப்படும் என்றும் அவர் கூறினார். காங்கிரஸ், பிஜேபி அல்லாத கூட்டணியிலேயே மார்க்சிஸ்ட் கட்சி இடம் பெறும் என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் தா. பாண்டியனிடம் கேட்டபோது, திமுக கூட்டணியில் சலசலப்பை ஏற்படுத்தவே ஜெயலலிதா அவ்வாறு கூறியிருக்கலாம் என்று குறிப்பிட்டார். ஜெயலலிதாவின் உண்மையான திட்டத்தை அறிந்த பின்பே அது குறித்து கருத்து கூற முடியும் என்றும் தா. பாண்டியன் கூறினார். (ஓ-5)

# ஈழத் தமிழர் கொல்லப்படுவதை கண்டிக்காத ஒரே கட்சி அ.தி.மு.க தான்

## திருமாவளவன் தெரிவிப்பு



இலங்கைத் தமிழர்கள் கொலை செய்யப்படுவதைக் கண்டிக்காத ஒரே கட்சி அதிமுக தான். அவர்களுக்கு வரவிருக்கும் தேர்தலில் மக்கள் பாடம் புகட்டுவார்கள் என்றார் விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன்.

கடலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இலங்கை பிரச்சினையில் ஐ.நா. சபை தலையிட வேண்டும். இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையில் தினம் தினம் நடைபெறும் தமிழர் படுகொலையை இது வரை கண்டிக்காத தமிழகத்தில் உள்ள ஒரே கட்சி அதிமுக தான் என்றும் அக்கட்சியினருக்கு வரவிருக்கும் தேர்தலில் மக்கள் நல்ல பாடம் புகட்டுவார்கள் என்றும் தெரிவித்தார். (ஓ-6)

# போரை நிறுத்த வற்புறுத்த முடியாது; பிரணாப் முகர்ஜியின் கூற்றுக்கு இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கம் கண்டனம்

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் மீதான போரை நிறுத்த முடியாது என்று கூறிய மத்திய மந்திரி பிரணாப் முகர்ஜிக்கு இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. கூறிய வார்த்தைகளை திரும்ப பெறாவிட்டால் மத்திய மந்திரியை கண்டித்து போராட்டம் நடத்தப் போவதாகவும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் கோவையில் நேற்று முன்தினம் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டத்துக்கு பின்னர் பழ. நெடுமாறன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

இங்கு நடைபெற்ற கூட்டத்தில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. இலங்கை தமிழர்களுக்காக கடலூரில் தீக்குளித்து உயிர் தியாகம் செய்த தமிழ் வேந்தன் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். கடலூரில் நடைபெறும் அவரது இறுதி ஊர்வலத்தில் அனைத்து தலைவர்களும் கலந்து கொள்வது என்று முடிவு செய்யப் பட்டது.

அத்துடன் சென்னையில் உள்ள அமெரிக்க தூதரக அலுவலகத்துக்கு, இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க தலைவர்கள் அனைவரும் சென்று, இலங்கையில் உடனடியாக போரை நிறுத்த வேண்டும் என்று வற்புறுத்தி கையெழுத்திட்ட மனுவை தூதரகத்தின் மூலம் அமெரிக்க குடியரசு தலைவருக்கு அளிக்க இருக்கிறோம். மற்ற நாடுகளின் தூதரக அலுவலகங்களிலும் மனு அளிப்போம்.


இந்தியாவின் தற்காலிக பிரதமர் பொறுப்பை ஏற்றுள்ள பிரணாப் முகர்ஜி நாடாளுமன்றத்தில் பேசுகையில்,

போர் நிறுத்தம் செய்யும்படி இலங்கை அரசை, இந்தியா வற்புறுத்த முடியாது என்று அறிவித்து இருப்பது 6½ கோடி தமிழர்களின் ஒன்றுபட்ட வேண்டுகோளை, துச்சமாக மதித்து தூக்கி எறியும் போக்காகும். இந்திய அரசின் இந்த நிலைப்பாடு குடியரசு தலைவர் உரையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி இருந்ததற்கு முற்றிலும் எதிரான நிலைப்பாடாகும்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. அரசின் வாக்குறுதியை நம்பி, பாதுகாப்பு வலயத்திற்குள் வந்த மக்கள் குண்டு வீசப்பட்டு படுகொலை செய்யப்படுகின்றனர்.

மருத்துவனைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. மருத்துவர்களும், தாதியர்களும் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தை இலங்கை அரசு வெளியேற்றி உள்ளது.

மேற்கண்டவற்றை எல்லாம் குறித்து சிறு கண்டனம் கூட தெரிவிக்காத பிரணாப் முகர்ஜி விடுதலைப்புலிகள் மீது பொய்யான பழிகளை சுமத்தி, பிரச்சினையை திசை திருப்ப முயல்வதை இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கம் வன்மையாக கண்டிக்கிறது.



பிரணாப் முகர்ஜியின் அறிவிப்பின் காரணமாக இலங்கையில் போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என அறிவிக்கும் துணிவை இலங்கை அரசு பெற்றுள்ளது.

இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்து இனப் படுகொலை செய்யப்படுவதை ஊக்குவிக்கும் வகையில் பேசியதை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்றும், இல்லையேல் இந்திய அரசுக்கு எதிராக பெரும் போராட்டம் தமிழகத்தில் வெடிக்கும் என்றும் பிரணாப் முகர்ஜிக்கு இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கம் எச்சரிக்கை விடுக்கிறது.

இலங்கையில் தமிழர்கள் மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று வற்புறுத்தி, தமிழ்நாடு முழுவதும் வருகிற 23ஆம் திகதி முதல் ஒரு வார காலத்தில் 2 கோடி மக்களிடம் கையெழுத்து பெறப்படும்.

இந்த கையெழுத்து பிரதிகளை ஐ.நா. பேரவை செயலாளர் நாயகம் மற்றும் அமெரிக்க, ரஷிய குடியரசு தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் மக்கள் திரள் பேரணி கோவை, கடலூர், மதுரை பகுதிகளில் நடைபெற்றுள்ளது.

வருகிற 28ஆம் திகதி திருச்சியிலும், மார்ச் 2 ஆம் திகதி தூத்துக் குடியிலும் நடத்தப்படும். சேலம், புதுச்சேரியில் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று பழ. நெடுமாறன் கூறினார். (ஓ-6)

# இந்திய விமானப் படையினர் சென்னை ஊடாக இலங்கை பயணம்

## தமிழகத்தில் கொந்தளிப்பு

(சென்னை)

இந்திய விமானப் படை வீரர்கள் 11 பேர் சென்னையில் இருந்து கொழும்பு வந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தமிழகம் முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏர் மார்ஷல் மகேஷ் என்பவர் தலைமையில் இவர்கள் 2 குழுக்களாகப் பிரிந்து கொழும்பு சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த 17 ஆம் திகதி நண்பகல் 7 பேரும் அன்று மாலை 4 பேரும் கொழும்பு சென்றுள்ளனர்.

செய்தியாளர்கள் கண்டுபிடித்து விடாமல் இருப்பதற்காக, விமானப்படை வீரர்கள் அனைவருக்கும் குழுவாக இல்லாமல் தனித்தனியே டிக்கெட் பெற்றிருப்பது தெரிய வந்துள்ளது.

இலங்கையில் விமானப்படை தாக்குதலை அந்நாட்டு இராணுவம் தீவிரப்படுத்தியுள்ள நிலையில், இந்திய விமானப்படை வீரர்கள் கொழும்பு சென்றுள்ளது பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது. இது தமிழகம் முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது.

அண்மையில், இலங்கை விமானப்படை வீரர்கள் பயிற்சி பெறுவதற்காக சென்னை வந்தபோது, அரசியல் கட்சிகளின் கடும் எதிர்ப்பை அடுத்து, அவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ச5)

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 5-III

### நீர் முகாமைத்துவம்

நீரை முகாமைப்படுத்த வேண்டியது உலகம் முழுவதுக்குமான தேவையாக இருக்கின்றது. தவறினால் நல்ல நீரைத் தேடி ஓட வேண்டியிருக்கும்.



கடலிலிருந்து ஆவியாகி பின் முகிலாகி ஒடுங்கி மழையாகி பூமியில் விழுந்து வழிந்தோடும் நீராகி அங்கிருந்து சமுத்திரமாகி இப்படியே ஒரு வட்டத்தினுள்ளேயே நீர் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கின்றது.

பெய்யும் மழை கனமழையாகி பேய்க் காற்றுடன் கலந்து வீசும்போது அழிவுகளை ஏற்படுத்தி விடுகின்றது. இல்லாது விடில் பருவ மழையாக பெய்யும். சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்களால் பருவமழை காலம் தப்பி பெய்கின்றது.

இவ்வாறாக பெய்யும் மழையை முடிந்தளவு நீரேந்து பகுதிக்கு திசை திருப்பி சேமித்து பயன்படுத்த வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம்.

### நிலத்தடி நன்னீர்

நிலத்தினடியிருக்கும் நன்னீரை முகாமைத்துவப் படுத்துதலின் மூலமாக எமது தேவைக்கு மட்டும் பயன்படுத்திக் கொள்ளலாம். இப்படியிருக்கும் நீர் தெரிந்தோ தெரியாமலோ பயன்படுத்திய உள்ளீடுகளினால் மாசடைந்து விட்டது.

இதனால் மாசடைந்த நீரைக் குடிப்பதனால் நீருடனான அனைத்து நோய்களுக்கும் மனிதன் ஆட்படுகின்றான்.

அசேதனப் பசளைகளிலிருந்து வெளிவிடப்படும் நைதரேற்று - நைதரசன் ஓடும் நீரில் கரைந்து நன்னீர் தேங்கும் கிணறு, ஆறு என்பவற்றில் கூட்டுச் சேர்கின்றது. குடிக்கும் நீரில் இருக்க வேண்டிய நைதரேற்று - N இனது அளவு லீற்றரொன்றிற்கு 10 ppm என உலக சுகாதார நிறுவனம் அளவீடு வைத்திருக்கின்றது.

ஆனால் திருநெல்வேலி, கோண்டாவில் பகுதியில் செய்த ஆய்வின்படி 65% கிணறுகள் உலக சுகாதார நிறுவனத்தின் வரையறை எல்லையை கடந்திருக்கின்றன.

எம்மை அறியாமலேயே மாசுபடுத்தப்பட்ட நீரை குடித்துக் கொண்டிருக்கிறோம். விளைவு மட்டும் விபரீதமானது. இதனால் எமது உடலுக்கு தீங்கு ஏற்படுகின்றது. இன்னது என்ற இனம்புரியாத நோய்கள் பலருக்கு வந்து அவர்கள் இறப்பதற்கும் காரணமாகின்றன.

### பயன்படுத்தும் அசேதன இரசாயனங்களின் அளவை மட்டுப் படுத்தல்

விவசாயிகள் நீர் மாசுபடுவதால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளை உணர்ந்து தேவையற்ற நிலையில் அதிகூடிய அளவில் பயன்படுத்தப்படும் எந்தவகை அசேதன இரசாயனத்தையும் தவிர்க்க வேண்டும்.

எமக்கு உண்ண உணவு தரும் விவசாயி நஷ்டப்படாத வகையில் எளிய தொழில் நுட்பங்களை வேளாண்மையில் உள்வாங்குவதன் மூலமாக மெல்ல மெல்ல அசேதன இரசாயன பாவனையை குறைத்துக் கொள்வது நாம் வாழும் சமூகத்திற்கு அடுத்த எமது சந்ததிக்கு செய்யுமொரு மனித நேயத்துடனான கைங்கரியமாகும்.

"உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தோரே"




என்னும் வாக்குக்கிணங்க உணவு தரும் விவசாயி சிறப்பாக வாழ அனைத்த வழிகளிலும் முயல வேண்டும்.

இங்கே யாழ்ப்பாணத்திலுள்ள விவசாய விரிவாகத்துறையினால் சிறந்த விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்படுவது நல்ல ஒரு முன்மாதிரியான விடயம். ஊக்கமும் ஆக்கமும் கொடுக்கும் பிரதிப்பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர்கள், விரிவாக்க உத்தியோகத்தர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

"விருந்து" தருபவருக்கு விருது கொடுக்கப்பட்டுள்ளது. மூன்று வேளையும் உணவு எமக்கு விருந்து தானே. அதை அளவுக்கதிகமாக உண்டுவிட்டால் மருந்தை நாட வேண்டியிருக்கும். அதனால் உண்ண விருந்து தரும் விவசாயப் பெருமக்களை விருதுகள் கொடுத்து வாழ்த்துவதுடன் உணவை மருந்தாக அளவாக உட்கொண்டால் ஒருவேளை உணவில்லாதவனுக்கும் உணவு கிடைத்து விடும்.

### சேதன விவசாயத்தை ஊக்குவித்தல்

இயற்கையுடன் இணைந்து செய்யப்படும் சேதன விவசாயத்தை முழு மூச்சாக ஊக்குவிப்பது சாலச் சிறந்தது. சேதன விவசாயம் என்பது ஏதோ ஒரு தொழில் நுட்பம் என கொள்ளல் ஆகாது.

எமது விவசாயிகள் பாரம் பரியமாக செய்து வரும் இலகு தொழில் நுட்பம் இது. அனைத்தும் எம்முன்னோர்கள் சொல்லி செய்து வைத்தவை. விஞ்ஞானத்தின் சாயல் பூசி தூசி தட்டி எடுக்கப்பட்டவை இவை.

பண்ணைக் கழிவுகளை கூட்டுரமாக்கி பண்ணையிலேயே இடுதல் மீள் சுழற்சி என்பர். இயற்கையாக கிடைக்கும் தாவரங்களின் பாகங்களை அரைத்து விசிறி பூச்சிகளை கட்டுப்படுத்துதல்.

கூட்டுப்பயிர் செய்கை முறை மூலம் வருவாயை அதிகரிப்பதுடன் பீடைப் பெருக்கத்தையும் கட்டுக்குள் வைத்திருக்கலாம். தேவை கருதிய உள்ளீடுகளின் பயன்பாடு இப்படி பலவற்றை இங்கே குறிப்பிடலாம். இவை பற்றி விளக்கமாக இன்னொரு இடத்தில் பார்ப்போம்.

அசேதன விவசாயத்திற்கான மாற்றீடு சேதன முறை விவசாயம் மட்டுமே. சேதன முறையில் உற்பத்தி செய்யப்படும் விளை பொருட்களுக்கு சிறந்த விலை கிடைக்க வேண்டும்.

தங்களின் வாழ்வாதாரமாக விவசாயத்தை செய்துவரும் விவசாய பெரு மக்களை அவர்கள் சிறப்பாக மகிழ்வாக வாழ அனைத்து வழிகளையும் செய்ய வேண்டும். விவசாய பெருமக்களுக்கும் எமது சமுதாயத்தில், நிகழ்வுகளில், விழாக்களில் தேவையான கௌரவத்தை கொடுக்க முன் வாருங்கள்!

எம் இனிய உறவுகளே!

வெறுமனே பான்ட், சேட் போட்டு காலுக்கு சப்பாத்தும் கழுத்தில் பட்டியுடனும் வருபவர்களுக்கு மட்டும் கொடுக்கும் மாலை மரியாதைகளை வயற்பரப்பிலே தன் உயிரை கொடுத்து உணவு செய்யும் விவசாயப் பெருமக்களுக்கு கொடுங்கள்.

எமது நாட்டில் என்று விவசாயப் பெருமக்களுக்கு இப்படியான கௌரவம் கிடைக்கின்றதோ அன்று இன்னொரு பசுமைப் புரட்சியின் வெற்றி கிடைக்கும். மாற்றம் வெறுமனே சொல்லளவில் இல்லாது செயலளவில் இருக்க வேண்டும். செயலளவில் என்பது சுய இலாபத்திற்காக இருக்கவே கூடாது.

### கூட்டுப் பயிர்ச் செய்கை சிறந்தது

நாம் பயிரிடும் பயிர்களுக்கு தேவையான நீரின் அளவு ஒரேயளவினதாக இருப்பதில்லை. இதனைக் கருத்தில் கொண்டால் ஒரு வயற்பரப்பில் தனி ஒரு பயிரை பயிர் செய்வதை விட ஒன்றுக்கு மேற்பட்ட பயிரை நடுகை செய்யும் போது பயிர்கள் தமக்கிடையே ஒத்து மாறி பாய்ச்சும் நீரை பகிர்ந்து கொள்ளும். இது தவிர நாம் இடுகின்ற பசளைகளைக் கூட பகிர்ந்து கொள்ளும்.

நீரைப் போன்று இங்கே தேவையான சத்துக்களும் வித்தியாசப்படுவது பல பயிர்களை நடுவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கின்றது.

அவரையினப் பயிர்கள் தழைச் சத்தை மண்ணினுள் நிலைநாட்டுவதனால் கூட்டுப் பயிர்ச் செய்கையில் இதற்கொரு இடம் கொடுக்கலாம்.

கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

### வள்ளிகளைப் பயிர்செய்தால் அள்ளித்தரும் காசு

எம்பெருமான் முருகனுக்கு வள்ளி துணையானது போல எமக்கு வள்ளி உணவு சமனிலைக்கு துணையாகும். வள்ளிகளில் பல வகை உண்டு. மரவள்ளி, மோதகவள்ளி, இராசவள்ளி, சிறுவள்ளி, உலக்கை வள்ளி மற்றும் இரத்த வள்ளி என பல வகைகள் உண்டு.

மாச்சத்து பிரியர்கள் இந்த வள்ளிகளை வாங்கி உண்டால் விவசாயிகள் இவற்றை விரும்பி பயிர் செய்வார்கள். நாலு மரக்கறியை மட்டும் காட்டும் வயிற்றிற்கு வேறு மரக் கறிகளும் உண்டென தெரிய வைத்தல் நல்லது.

வள்ளிகளுக்கு நீர் அதிகம் தேவை. அதிலும் சேப்பங்கிழங்குக்கு சற்று அதிகமாக தேவை. இவற்றை ஏனைய பயிர்களுடன் கூட்டுச் சேர்த்தால் குறிப்பாக வேறு குடும்பப் பயிர்களுடன் கலந்து பயிர் செய்தால் அதிக இலாபம் பெறலாம் பயன்படுத்திய நீரை பெறுமதியாக்கலாம்.

(தொடரும்)

# மண்புழு வளர்ப்பும் அனுகூலங்களும் 2

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இயற்கையாக உக்கும் சேதனைக் கழிவுளிலும் பார்க்க மண்புழு உரத்தில் அதிகப் படியானஅனுகூலங்கள் காணப்படுகின்றன. அதாவது இம் முண்புழு உரத்தில் பொசுபரசின் அளவு 15-30% ஆலும், நைதரசனின் அளவு 6% ஆலும், அதிகரிக்கப்படுகின்றன.

அத்துடன் கல்சியம், மக்னீசியம், பொட்டாசியம் போன்றனவற்றின் கிடைப்பனவும் அதிகரிக்கிறது.

மக்காதல் செயற்பாடு அதிகரிக்கப்படுவதால் மண்ணில் நீர் தாங்குதிறன் அதிகரிக்கும். மண்கட்டமைப்பு (Soil Structure) சீர் பெறும், அயன் தொழிற்பாடு அதிகரிக்கப் படும். அத்துடன் தாவரத்தின் வேர்த் தொகுதி



விருத்தியடையும். இச்செயற்பாடுகளுக்கு மண்புழு உரத்தில் காணப்படும் தாவர வளர்ச்சி ஓமோன்கள, பக்டீரியா எதிரிகள் (Antibiotic), விற்றமின்கள் போன்றவையும் துணை செய்கின்றன.

இவை பயிர் வளர்ச்சியிலும், பூத்தல் மற்றும் பழம் உருவாதலிலும் உதவுகின்றன. அத்துடன் நோய் பீடைத் தாக்கத்துக்கு தாவரங்கள் எதிர்ப்பைக் காட்டுவதற்கும் துணை புரிகின்றன.

இறுதியில் இவையாவும் மண் வளத்தையும், மண்ணின் கட்டமைப்பையும் அதன் ஆரோக்கியத்தையும் அதிகரிக்கச் செய்து சிறந்த விவசாயத்துக்கு இட்டுச் செல்லும். இங்கு கல்சியம் கியூமேற் (Calcium humate) எனும் வேதிப் பொருளே மண்ணின் கட்டமைப்பை விருத்தி செய்வதிலும் நீர் தாங்கு கொள்ளளவை அதிகரிப்பதிலும் பங்களிப்புச் செய்கின்றது.

அன்றாடம் வீட்டிலிருந்து கழிக்கப்டும் சமயலறைக் கழிவுகளை அகற்றுதல் மற்றும் அவற்றை உரிய முறையில் அகற்றத் தவறும் பட்சத்தில் அதிலிருந்து வெளிவரும் துர்நாற்றம் போன்ற பிரச்சினைகளால் பெரும்பாலும் நகர்ப்புற மக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

இந்தப் பிரச்சினையைப் போக்குவதற்கு வீட்டிலுள்ளோர் இலகுவாகக் கையாளத்தக்க பெட்டி முறை மண்புழு வளர்ப்பு (Deal Wood Box) மிக உகந் தது.

மண்புழுக்களில் ஒட்சிசன் $O_2$ அதிகளவாக உடைய ஹிமோ குளோபின் காணப்படுகிறது. எனவே மண்புழுக்கள் துர்நாற்றத்தை ஒட்சியேற்ற போதுமானளவு ஒட்சிசனை வெளிவிடுகிறது.

இதனால் $H_2S$ மேர்கப்ரான்ஸ் போன்ற துர்நாற்றம் வீசும் வாயுக்கள் ஒட்சியேற்றப்பட்டு கழிவுகளிலிருந்து உருவாக்கப்படும் துர்நாற்றத்தைத் தவிர்ப்பதுடன் வீட்டுத்தோட்டத்துக்கும், பூங்கன்றுகளுக்கும் தேவையான மண்புழு உரத்தையும் தயார் செய்து கொள்ளலாம், சூழல் மாசடைவதனையும் குறைத்துக் கொள்ளலாம்.

### மண்புழு உரத்தை தயாரிக்கும் முறை

30 சென்ரிமீற்றர் நீள அகல உயரமுடைய கள்ளிப் பலகையாலான பெட்டியானது வீடொன்றுக்கு போதுமானது. பெட்டியின் ஒரு



பக்கத்தில் $^2/_3$ பங்கு உயரத்தில் சிறிய கதவு போன்ற அமைப்பு உருவாக்கப்படல் வேண்டும்.

இது மண்புழுக்களை தொந்தரவு செய்யாமல் மண்புழு உரத்தை வெளியேற்றுவதற்கு உதவும். முதலில் பெட்டியின் 4 அங்குல உயரத்துக்கு மணலை நிரப்பல் வேண்டும் பின் 2 அங்குல உயரத்துக்கு தென்னந் தும்பை இடல் வேண்டும். இவை இரண்டும் நீர் வடி திறனை அதிகரித்து மேலதிக நீர் தேங்குவதைத் தடுக்கும்.

பின்னர் மெல்லிய படையாக மண்ணைத் தூவல் வேண்டும் அதன் மேல் சுமார் 250 வரையான முழு வளர்ச்சிடைந்த மண்புழுக்களை இடல் வேண்டும். பின்னர் நாள் தோறும் பெறப்படும் சமை யலறை கழிவுகளை பெட்டியின் மேல்புறத் தினூடாக பரப்பி அதன் மேல் ஈரலிப்பான துணியால் மூடிவிட வேண்டும்.

தொகுதி மேலதிகமாக நீர்தேங்கி நிற்காததையும் அத்துடன் போதுமானளவு ஈரலிப்பு இருப்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

பெட்டியானது சமையலறைக் கழிவுகளால் முற்றாக நிரம்பியவுடன் அவை 5-6 நாட்களுக்கு அப்படியே வைக்கப்படல் வேண்டும்.

மண்புழு உரம் உருவாக்கப்பட்ட பின்னர்

த. கஜந்தன்
விவசாய உயிரியல் (சிறப்பு)
தகவல் தொடர்பு மையம்
விவசாய பீடம், யாழ் பல்கலைக்கழகம்

பெட்டியானது திறக்கப்பட்டு 1-2 மணித்தியாலங்கள் சூரிய ஒளிக்கு திறந்து விடப்படல் வேண்டும் அப்போது எல்லா புழுக்களும் பெட்டியின் அடிப்பாகத்துக்கு சென்றுவிடும் பின்னர் அமைக்கப்பட்ட கதவின் வழியாக மண்புழு உரத்தை சுலபமாக வெளியே எடுக்கலாம்.

மண்புழு வடி திரவம் (Vermi wash) எனப்படும் மண் புழுவால் சுரக்கப்பட்டும் உடல் திரவத்தில் இருந்து பெறப்படுகின்ற ஒரு வகை உற்பத்தியானது மண்புழு வளர்ப்பின் இன்னுமொரு கூடுதல் நன்மையாகும். இம் மண்புழு உற்பத்தி மற்றும் பாவனை முறை பற்றி பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

(தொடரும்)

குழம்பிய குட்டையில் முகம் தெரியாது! குழப்ப மான உள்ளத்தில் நியாயம் தெரியாது!

– இலங்கை

வலம்புரி

## சுப்பிரமணிய சுவாமியால் சென்னையில் நடந்த சூரன்போர்

சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் சட்டத்தரணிகளுக்கும், பொலிஸாருக்கும் இடையில் நடந்த மோதல் கண்டு அதிசயிக்காத –ஆச்சரியப்படாத மனிதர்கள் இருக்கவே முடியாது.

இரு தரப்பும் மாறிமாறிக் கல்லெறிந்தனர். வாகனங்களை அடித்து உடைத்தனர். நீதிமன்ற வளாகத்தில் அமைந்திருந்த பொலிஸ் நிலையம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

இச்சம்பவத்தின்போது நீதிபதியொருவர் தலையில் காயமடைந்தார்.

இவையெல்லாம் எதற்காக நடந்து என்றால் குழப்பங்காலி சுப்பிரமணியசுவாமி சென்னை உயர்நீதிமன்றத்திற்கு ஒருதடவை சென்றது தான்.

சிதம்பரம் கோவில் விவகாரம் தொடர்பில் சுப்பிரமணிய சுவாமி சென்னையில் உள்ள உயர்நீதிமன்றத்திற்குச் சென்றார்.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் யதார்த்தம் புரியாமல் – தமிழர்களின் அவல நிலையைத் தெரிந்து கொள்ளாமல் விதண்டாவாதம் செய்யும் சுப்பிரமணிய சுவாமிய்யைக் கண்ட சட்டத்தரணிகள் அவர் மீது முட்டை எறிந்து மகா அபிஷேகம் செய்தனர்.

தம்மீது முட்டை எறிந்தவர்களைக் கைது செய்யவேண்டுமென சுப்பிரமணிய சுவாமி கேட்க, சட்டத்தரணிகளோ சுப்பிரமணிய சுவாமியைக் கைது செய்யுமாறு கோரிக்கை விடுத்தனர்.

நிலைமை முற்றிப் போனதன் காரணமாக சட்டத்தரணிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மிகப்பெரும் களேபரம் நடந்தேறியது.

ஒருநாள் ஒரு குறித்த நேரத்தில் குழப்பங்காலி சுப்பிரமணியசுவாமி நீதிமன்றத்திற்குச் சென்றதனால் இத்துணை களேபரம் என்றால் சுப்பிரமணிய சுவாமி எத்தன்மையர் என்பதைப் புரிந்து கொள்வதில் சிக்கல் இருக்க முடியாது.

எடுத்ததற்கெல்லாம் கதைப்பதும் எப்படியும் கதைக்கலாம் என நினைப்பதும் பலருக்குத் துன்பங்களைத் தந்துவிடுகிறது. அந்த ஒரு துன்பமாகவே சென்னை உயர் நீதிமன்றத்தில் பொலிஸாருக்கும் –சட்டத்தரணிகளுக்கும் நடந்த மோதலைக் குறிப்பிடலாம்.

சுப்பிரமணிய சுவாமியால் சென்னையில் நடந்த சூரன்போர் போல் இலங்கையிலும் சில சுப்பிரமணிய சுவாமிகள் இருக்கவே செய்கிறார்கள்.

என்ன செய்வது! சூரன்போர்களை இடையிடையே நடத்துவதற்காக இறைவன் ஆங்காங்கே சுப்பிரமணிய சுவாமிகளையும் படைத்திருக்கிறான் என்று அமைதி கொள்வதைத் தவிர வேறு வழி எதுவும் இல்லை.

# தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் சமூக வேலைகள் தொடர்பான தத்துவ சாஸ்திரம் பாடநெறியை ஆரம்பிக்கத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் கீழ் உள்ள சமூக வேலைகள் தொடர்பான டிப்ளோமா இளமானிப் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்பை வழங்கும் சமூகக் கல்வி நிறுவனமாகிய தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் இதுவரை சமூக சேவைகள் வேலைகளுக்காக டிப்ளோமா மற்றும் இளமாணிப் பட்டப்படிப்பும் (B.S.W) முதுமானிப்பட்டப்பின் படிப்பும் (M.S.W) வழங்கி இருந்தது.

தற்போது அதற்காக தத்துவ சாஸ்த்திரம் (Ph.D) பட்டத்தை வழங்கவதற்கு சமூக சேவைகள் மற்றம் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனையின் பிரகாரம் திட்டமிடப்பட்டு வருகின்றது.

இதன்அடிப்படைத் திட்டத்தை தயாரிப்பதற்காக கனடா குவீன்ஸ் பல்கலைக்கழகத்தின்அனுசரணையுடன் கடந்த 10 ஆம் திகதி கொழும்பு கலதாரி ஹோட்டலில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்கா, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஆலோ சகராகிய பேராசிரியர் திருமதி யோகா இராசநாயகம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.ஏ.அலாம் ஆகியோர் தலைமையில் கூட்டமொன்று நடாத்தப்பட்டது.

இதற்கு முன்னர் கடந்த வருடம் செப்டெம்பர் மாத்தில் இதன் முதலாவது கலந்துரையாடல் நடத்பட்டதுடன் அப்போது எடுக்கப்பட்ட தீர்மரனங்களின் பிரகாரம் அவற்றை மீள் நோக்கு செய்வதும் இந்த பட்டப் பாடநெறியை கூடிய விரைவில் ஆரம்பிப்பதற்கான தீர்மானங்களை எடுப்பதும் இதன் நோக்கமாக இருந்தது.

சமூக வேலைகள் தொடர்பான தத்துவ சாஸ்திரம் (Ph.D) பாட நெறியை ஆரம்பிப்பதற்குரிய இறுதி மதிப்பீடு அன்றைய தின கூட்டத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன். இந்து பாட நெறியின் திட்டமில் நடவடிக்கைகள் தொடர்பான சாதகமான தீர்மாணங்கள் எடுக்கப்பட்டது. விஷேடமாக இந்த பாட நெறியை விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டுனெவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன் போது இந்த பாடநெறிக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் போது சமூக வேலைகள் தொடர்பான இளமானிப் பட்டத்தைப் பெற்றுள்ள அந் நிறுவனத்தின் சிரேஷ்ட பீட சபைக்கு விஷேட சந்தர்ப்ப மொன்றை வழங்கி அதற்கு மேல திகமாக அரச மற்றும் அரச சார்பற்ற நிறவனாங்களில் பட்டப்பின் படிப்பை பூர்த்திசெய்த தகைமைகள் உள்ள நபர்களை இணைத்துக் கொள்ள வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. (ஓ)

## சைவ சமய அறிவுப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வண்ணை – சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் வருடாந்தம் நடத்தும் சைவசமய அறிவுப்பரீட்சை நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி முதல் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கென யாழ்.இந்துக்கல்லூரி, கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, இராமநாதன் கல்லூரி, புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி, காரைநகர் கலாநிதி. ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம்,

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, சங்கானை சிவப் பிரகாச மகாவித்தியாலயம், வட்டு. இந்துக்கல்லூரி, அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஸ்ட மகா வித்தியாலயம், இணுவில் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, நயினாதீவு மகா வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகிய 15 பரீட்சை நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தரம் 3 தொடக்கம் தரம் 13 வரையில் நடைபெறும் இப் பரீட்சைக்கு சுமார் 3ஆயிரத்து 300 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். இவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் பரீட்சார்த்திகள் கல்வி பயிலும் பாடசாலைகளுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சைவ சமய அபிவிருத்திக் கழக பரீட்சை செயலர் சு. சிறீகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ-6)

## திருநெல்வேலி சந்தையில் இருந்து 20 இலட்சம் ரூபா செலவில் 600 அடி நீள வடிகால் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

-நல்லூர் பிரதேசசபை பொது மக்களினதும் வர்த்தகர்களினதும் நலன்கருதி கமநெகும திட்டத்தின் கீழ் 20 இலட்சம் ரூபா செலவில் திருநெல்வேலி– ஆடியபாதம் வீதியில் சுமார் 600 அடி நீளமான வடிகால் வாய்க்காலைப் புதிதாக அமைத்து வருகின்றது.

மழைக்காலங்களில் யாழ்ப்பாணத்தில் பிரதான சந்தையாக விளங்கும் திருநெல்வேலி சந்தையின் உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் மழை வெள்ளம் ஓட முடியாமல் தேங்கி நிற்பதால் சந்தையில் வியாபாரம் செய்யும் வர்த்தகர்கள் மட்டுமல்ல சந்தைக்கு வரும் பொதுமக்களும் பெரும் சிரமங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாகிறார்கள்.

பல வருடங்களாக இருந்துவரும் இந்த நிலைப்பாடு குறித்து பாதிக்கப்பட்ட மக்கள் நல்லூர் பிரதேச சபையின் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து அவர் எடுத்துக் கொண்ட உடனடி நடவடிக்கையைத் தொடர்ந்து 20 இலட்சம் ரூபா செலவில் வடிகாலமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆடிய பாதம் வீதியில் திருநெல்வேலிச் சந்தையிலிருந்து தெற்குப் பக்கமாக சுமார் 600 அடி நீளத்திற்கு வடிகாலமைக்கப்பட்டு வருகிறது. இந்த வடிகால் மூலம் செல்லும் மழை, வெள்ளம் பரவைக்குளத்தைச் சென்றடையும் என்று தெரிவித்துள்ள செயலாளர் மக்களின் நலன் கருதி மேலும் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவித்தார் . (ஓ-5)

## கடந்த 8 வருடங்களில் இலங்கை பெற்ற கடன் ரூபா 3,340,702 மில்

இலங்கையின் உள்நாட்டு, வெளிநாட்டு கடன் தொகை 2008 ஆம் ஆண்டு இறுதிப் பகுதிவரை 34 இலட்சம் மில்லியன் ரூபாவை கடந்திருப்பதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது. 2001 ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த ஆண்டு வரையிலான 8 ஆண்டு காலப்பகுதியாகவே இந்தக் கடன் பெறப்பட்டுள்ளதாக அரச வருமானம் மற்றும் நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய பாராளு மன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் மாத்திரம் உள் நாட்டில் 5 இலட்சத்து 50 ஆயிரத்து 570 மில்லியன் ரூபாவை அரசாங்கம் கடனாகப் பெற்றிருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டுக் கடனாக ஒரு இலட்சத்து 36 ஆயிரத்து 59 மில்லியன் ரூபா பெறப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் ரஞ்சித் சியம்பிலாப் பிட்டிய தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி பாராளு மன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் அமைச்சர் இந்தத் தகவல்களை வெளியிட்டார். (ஓ-3)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி மன ஒருமைப்பாட்டின் ஆற்றல்



இத்தகைய மன ஒருமைப்பாட்டில் உள்ள பிரச்சினை இது தான். நாம் மனத்தை அடக்குவதில்லை, மனம் நம்மை அடக்கி ஆள்கிறது. நமக்கு வெளியிலுள்ள ஏதோ ஒரு பொருள் நமது மனத்தைத் தன்னிடம் இழுத்து, அது விரும்பும் நேரம் வரை தன்னிடமே வைத்துக் கொள்கிறது.

இனிய இசையைக் கேட்கிறோம், அழகிய படத்தைப் பார்க்கிறோம் , நம்து மனம் அங்கேயே நின்று விடுகிறது. நம்மால் அதை மீட்க முடிவதில்லை.

உங்களுக்குப் பிடித்த ஒரு தலைப்பில் நான் பேசினால் அதில் உங்கள் மனம் குவிகிறது. நான் உங்களை மீறி உங்கள் மனத்தை இழுத்து அந்தக் கருத்தில் பதியச் செய்கிறேன். இவ்வாறு நம்மையும் மீறி நமது கவனம் திசை திருப்பப்படுகிறது, பல பொருட்களில் நமது மனம் குவிக்கப்படுகிறது. நம்மால் இதைத்தவிர்க்க முடியாது.

# ஈழத்தமிழர் ஆதரவு போராட்டங்களை திசை திருப்பும் சுப்ரமணிய சுவாமியின் சூழ்ச்சி

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக தமிழ்நாட்டு சட்டத்தரணிகள் பல்வேறு போராட்டங்களை செய்து வருகின்றனர்.

இலங்கையில் தமிழ் உறவுகள் அழிந்துகொண்டிருக்கின்றன, அதனைத் தடுக்க தழிழக, மத்திய அரசுகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென தமிழ்நாடே கொந்தளித்துள்ளது.

இதில் தமிழ்நாட்டு சட்டத்தரணிகளின் போராட்டங்கள் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

ஆரம்பத்தில் சில மணிநேர நீதிமன்ற புறக்கணிப்பில் ஈடுபட்டு, பின்னர் கறுப்புக்கொடி போராட்டம், புகையிரத வழிமறப்பு, உண்ணாவிரதம், நீதிமன்றங்களை ஒரு வாரகாலமாக புறக்கணித்தல் என சட்டத்தரணிகள், நாளுக்கு நாள் ஈழத்தமிழர்கள் அழிக்கப்படுவதை எதிர்த்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

சுவாமி மனுத்தாக்கல் செய்திருந்தார்.

எனவே இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தனக்கு அவமானத்தை ஏற்படுத்திய சட்டத்தரணிகளை பழி தீர்க்கவும் அவர்களின் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான போராட்டத்தை திசை திருப்பவும் திட்டமிட்ட சுப்ரமணிய சுவாமி தனது சூழ்ச்சியால் பொலிஸாரை கொந்தளிக்கச் செய்தார்.

அதற்காக உயர் நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு தான் வரும்போது உச்சப்பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸாரை தயார்ப்படுத்தினார் சுப்ரமணிய சுவாமி.

இதனால் இந்திய வரலாற்றில் முதன் முறையாக உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிகள் அமர்வு மண்டபத்திலும் துப்பாக்கி ஏந்திய பொலிஸார் சுப்ரமணிய சுவாமிக்கு பாதுகாப்பு வழங்கினர்.

துப்பாக்கி ஏந்திய பொலிஸார் விசாரணை மண்டபத்தில் இருப்பதை



சட்டத்தரணிகள் கோஷமிட்டதுடன் வளாகத்தில் இருந்த பொலிஸ் நிலையத்தையும் தீயிட்டுக் கொளுத்தி னர்.

இதில் சம்பவ இடத்திற்கு வந்து சட்டத்தரணிகளை சமாதானப்படுத்திய நீதிபதி மீது பொலிஸார் நடத்திய கல்வீச்சில் அவரும் காயமடைந்தார்.

இச் சம்பவத்தில் சட்டத்தரணிகள், பொலிஸார் மற்றும் நீதிபதி உட்பட நூறிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

### சுப்ரமணிய சுவாமியின் சூழ்ச்சி அரங்கேறியது

இச் சம்பவம் ஆனது இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக நடைபெறும் சட்டத்தரணிகளின் போராட்டத்தை திசை திருப்ப திட்டமிட்ட சதி.

அதாவது ஈழத்தமிழர்களின் விரோதி சுப்ரமணிய சுவாமி செய்த சூழ்ச்சிக்கு பொலிஸார் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் இன்று கொளுந்து விட்டு எரிந்துகொண்டிருக்கும் இலங்கைத் தமிழர் ஆதரவுப் போராட்டத்தில் தளகர்த்தாக்களாக



### சுப்ரமணிய சுவாமி மீது அழுகிய முட்டை வீச்சு

இலங்கையில் தமிழர்கள் கொன்று ஒழிக்கப்படுவதற்கு ஆதரவாகவும் இலங்கை அரசிற்கு சாதகமான பிரசாரங்களை இந்தியாவில் மேற்கொண்டு வருகிறார் எனத் தெரிவித்து ஜனதா கட்சித்தலைவர் சுப்ரமணிய சுவாமி மீது அழுகிய முட்டைகளால் வீசி கடந்த செவ்வாய்க்கிழமை உயர் நீதிமன்றத்தில் வைத்து சட்டத்தரணிகள் தாக்கினர்.

சிதம்பரம் நடராஜர் கோயில் வழக்கில் தீட்சிதர்களுக்கு ஆதரவாக சென்னை உயர் நீதிமன்றத்திற்கு கடந்த செவ்வாய்க்கிழமை சுப்ரமணிய சுவாமி சென்றார்.

அதே தினத்தில் இலங்கையில் தமிழர்கள் கொன்றொழிக்கப்படுவதை எதிர்த்து நீதிமன்றப் புறக்கணிப்பில் ஈடுபட்ட சட்டத்தரணிகள், உயர் நீதிமன்ற வழக்காடு மண்டபத்தில் வைத்து நீதிபதிகளின் அமர்வுக்கு முன்பாக சுப்ரமணிய சுவாமி மீது முட்டைகளை வீசித் தாக்கினர்.



இச்சம்பவத்தை பதிவு செய்த உயர் நீதிமன்ற நீதிபதிகள் அமர்வு, தகுந்த விசாரணைக்காக தலைமை நீதிபதிக்கு பரிந்துரை செய்தனர்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதிகள் அமர்வு முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதனால் வழக்கில் தன்னையும் இணைத்துக்கொள்ளக் கோரி, சுப்ரமணிய

அவதானித்த உயர்நீதிமன்ற தற்காலிக தலைமை நீதிபதி முகோபாதயாயா, 'இது இராணுவ நீதிமன்றம் போல் உள்ளது' என வேடிக்கையாகத் தெரிவித்தார்.

இவ்வாறு உயர் பாதுகாப்புக்களுடன் நீதிமன்றம் வந்த சுப்ரமணிய சுவாமி வழக்கு விசாரணைகளை முடித்து பாதுகாப்பாக வெளியேறினார்.

### போர்க்களமாக மாறிய சென்னை உயர் நீதிமன்றம்

இதனைத் தொடர்ந்து பிற்பகல் சென்னை உயர் நீதிமன்றம் போர்க்கள மாக மாறியது. பொலிஸாருக்கும் சட்டத்தர ணிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் சட்டத்தரணிகள், பொலிஸார் மாத்திரமின்றி நீதிபதியும் காயமடைந்தார்.

கடந்த செவ்வாய்க் கிழமை ஜனதா கட்சி தலைவர் சுப்ரமணிய சுவாமி மீது முட்டை வீசி கலவரம் செய்த சட்டத்தரணிகளால் பொலிஸாரை பணி செய்யவிடாமல் தடுத்த குற்றச்சாட்டில் சட்டத்தரணி ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மேலும் சில சட்டத்தரணிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. அத்துடன் சுப்ரமணிய சுவாமி தாக்கப்பட்ட சம்பவத்தில் சட்டத்தரணிகளை கைதுசெய்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

### பொலிஸார் மீது கல்வீச்சு சட்டத்தரணிகள் மீது தடிஅடி

இதனையடுத்து பொலிஸாருக்கு எதிராக சட்டத்தரணிகள் கல்வீச்சில் ஈடுபட்டனர். சட்டத்தரணிகள் மீது பொலிஸார் தடிஅடி நடத்தினர்.

இரு தரப்பிலும் பலருக்கு மண்டை உடைந்தது. பொலிஸாரும் கற்களை எடுத்து சட்டத்தரணிகள் மீது வீசினர். இதனால் நீதிமன்ற வளாகத்தை விட்டு பொலிஸார் விலக வேண்டுமென

## போர்க்களமாக மாறிய சென்னை உயர்நீதிமன்றம்

### மௌனம் காத்த கலைஞர் அரசு

இச் சம்பவம் நடைபெறும் போது நீதித்துறை- சட்டத்துறைக்கு நடத்தப்பட்ட பொலிஸாரின் தாக்குதலை உடனடியாக தடுத்து நிறுத்த தவறிய முதல்வர் கலைஞர் கருணாநிதி அரசு, சுப்ரமணிய சுவாமியின் சூழ்ச்சிக்கு ஆதரவு வழங்கியது போலத் தோன்றுகின்றது.

களத்தில் நின்று சட்டத்தரணிகள் போராடி வருகின்றனர். சட்டத்தரணிகளின் ஈழத் தமிழர் ஆதரவுப் போராட்டமானது அரசியல் கட்சிகளின் போராட்டம் மாதிரியன்று, தொய்வின்றி தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது.

இந்தப் போராட்டத்தை திசை திருப்ப நினைத்த சுப்ரமணிய சுவாமி உட்பட தமிழகத்தின் சில ஈழத்தமிழர்களின்




இது மட்டுமல்லாமல் தமிழக முதல்வர் தனது பதவிக்காக இச் சம்பவத்தை கண்டிப்பதாகவும் விசாரணைகளை நடத்தி நடவடிக்கை எடுக்க தனக்கு ஆலோசனை வழங்குமாறு கேட்டு சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு சமாளிப்புக் கடிதம் ஒன்றை எழுதினார்.

அதில் வைத்தியசாலையில் இருக்கும் தான் அம்புலன்ஸ் வண்டியில் வந்து தங்களைச் சந்திக்கத் தயார் எனவும் கலவரத்தில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பில் ஆலோசனை வழங்குமாறும் முதல்வர் கருணாநிதி, உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியிடம் கேட்டிருந்தார்.

விரோதிகள் பொலிஸாரை களத்தில் இறக்கினர். இதனாலேயே விசாரணைக்கே ஏற்றுக்கொள்ளப்படாமல் இருந்த ஒரு வழக்கில் தம்மையும் இணைத்துக்கொள்ள வேண்டுமென சுப்ரமணிய சுவாமி உயர் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார்.

சுப்ரமணிய சுவாமி மீது முட்டை வீசப்பட்டது -உயர்நீதிமன்ற வளாகத்தில் சட்டத்தரணிகள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்திய சம்பவங்களை கூட்டிக் கழித்துப் பார்த்தால் இலங்கைத் தமிழர் ஆதரவான சட்டத்தரணிகளின் போராட்டத்தை களங்கம் ஏற்படுத்த திட்டமிட்ட சதி என்பதை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது.

**உருத்திரன்**

### சர்வான் பெறுமதியான சதம்

# தோல்வியிலிருந்து தப்பியது மேற்கிந்தியத்தீவுகள் அணி



(அன்டிகுவா)

சர்வானின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் மேற்கிந்தியத்தீவுகள் அணி மூன்றாவது டெஸ்ட் போட்டியை இறுதிவரை போராடி சமனிலை செய்தது.

இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 5 டெஸ்ட்,5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றிபெற்று மேற்கிந்தியத்தீவுகள் அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் ரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில் மூன்றாவது டெஸ்ட் கடந்த 15ஆம் திகதி அன்டிகுவா மனமகிழ் மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களையிழந்து 566 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 285 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து 281 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பொலோன் பின்னிலையை பெற்றது.

எனினும் பொலோன் நிலையை வழங்காமல் தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 221 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்களையிழந்த நிலையில் ஆட்டத்தைஇடைநிறுத்தி மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு வெற்றி இலக்காக 503 ஓட்டங்களை நிர்ணயித்தது.

இதனடிப்படையில் 503 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்களையிழந்து 143 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் ஐந்தாவதும் இறுதி நாளான நேற்றுமுன்தினம் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி சர்வானின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் இறுதிவரை போராடி தோல்வியை தவிர்த்தது.

ஐந்தாம் நாள்ஆட்ட நேர முடிவில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 370 ஓட்டங்களை எடுத்து 9 விக்கெட்டுக்களைமாத்திரமிழந்து ஒரு விக்கெட்டால் போட்டியை சமனிலை செய்தது.


இதில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய ராம் நரேஷ் சர்வான் 106 ஓட்டங்களையும் சிவ நாராயணன் சந்தர் போல் 55 ஓட்டங்களையும் அணித் தலைவர் ஹயில் 46,பவல் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரோட்,சுவான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் அன்டர்ஷன் 2 விக்கெட்டுக்களையும் ஹார்மிசன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டி சமனிலையானதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை யிலுள்ளது.

இப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை தோல்வியிலிருந்து மீட்டெடுத்த சர்வான் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

# டெபார் உலக சாதனை



ஸ்டக்ஹோமில் நடைபெற்று வரும் உள்ளரங்க தடகள போட்டியில் எத்தியோப்பிய வீராங்கனை மெசார்ட் டெபார் புதிய உலக சாதனை படைத்தார்.

முன்னாள் ஒலிம்பிக் சம்பியனான டெபார் 5000 மீற்றர் ஓட்டப் போட்டியை 14:24.42 நிமிடங்களில் முடித்து புதிய உலக சாதனையை படைத்துள்ளார்.


இதன்மூலம் அவர் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தனது சக நாட்டு வீராங்கனையான ட்ரினுஷ் டபாபா உள்ளரங்க தடகள போட்டியில் 5000 மீற்றரை 14:27.42 நிமிடங்களில் ஓடி முடித்து படைந்திருந்த சாதனையை முறியடித்தார்.

25 வயதான மெசார்ட் டெபார் கடந்த 6 ஆண்டுகளில் உள்ளரங்க தடகள போட்டிகள் எதிலும் தோல்வியை சந்தித்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான்-இலங்கை அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

(கராச்சி)

பாகிஸ்தான்-இலங்கை அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி இன்று கராச்சியில் ஆரம்பமாகின்றது.



கடந்த மாதம் பாகிஸ்தான் பயணம் மேற்கொண்ட இலங்கை அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடியது.

பின்னர் நாடு திரும்பிய இலங்கை அணி,இந்தியாவுடன் ஒருநாள் மற்றும் இருபது-20 தொடரில் பங்கேற்றது.

மீண்டும் பாகிஸ்தான் பயணம் செய்துள்ள இலங்கை அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் கராச்சியில் இன்று ஆரம்ப மாகிறது.

இரண்டாவது டெஸ்ட் அடுத்த மாதம் முதலாம் திகதி லாகூரில் ஆரம்பமாகிறது. முன்னதாக இலங்கை அணி,கடந்த 17 மற்றும் 18ஆம் திகதிகளில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி.) பட்ரான் லெவின் அணியுடன் இரண்டு நாள் பயிற்சி போட்டியில் விளையாடியது.

இதில் (பி.சி.பி.) பட்ரான் லெவின் அணி வெற்றிபெற்றது. இதுவரை இவ்விரு அணிகளும் 32 முறை டெஸ்ட் போட்டிகளில் மோதியுள்ளன.

இதில் 15 முறை பாகிஸ்தான் வெற்றிபெற்று ஆதிக்கம் செலுத்தி வருகிறது. 7முறை இலங்கை அணி வெற்றி பெற்றுள்ளது.

10 போட்டிகள் சமனிலையில் முடிபடைந்துள்ளன. இரு அணிகளும் வெற்றியை நோக்கி களமிறங் குவதால் போட்டியின் விறுவிறுப்புக்கு பஞ்சமிருக்காது என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை முதலாவது டெஸ்ட் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் 5 புதுமுக வீரர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கடந்த மூன்று ஆண்டுகளாக அணியில் இடம் கிடைக்காமல் தடுமாறிவந்த மத்திய வரிசை துடுப்பாட்டவீரர் அசிம் கமாலுக்கு 15 பேர்கொண்ட அணியில் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

# டெஸ்டிலிருந்து விரைவில் ஓய்வு-அப்ரிடி

(கராச்சி)

டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவது பற்றி ஆலோசித்து வருவதாக பாகிஸ்தான் சகல துறை வீரர் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

பாகிஸ் தான் அணியில் மூத்த வீரராகவும்,சிறந்த சகலதுறை வீரராகவும் பவனிவருபவர் சயிட் அப்ரிடி. இதுவரை 271 ஒருநாள்,26 டெஸ்ட் மற்றும் 15 இருபது-20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

தவிர ஒருநாள் போட்டியில் குறைந்த பந்தில் சதம் கடந்த வீரர் என்ற சாதனை படைத்துள்ளார்.

கடந்த 2006ஆம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கு எதிராக தனது கடைசி டெஸ்டில் விளையாடினார். இவர் சுமார் மூன்று ஆண்டுகளாக டெஸ்ட் அணியில் புறக்கணிக்கப்பட்டு வந்தார்.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 14





தொடர்ந்துதனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, முரளிதரனின் துல்லியமான சுழலிற்கு ஈடுகொடுக்க முடியாமல் 267 ஓட்டங்களை மாத்திர மெடுத்து சகலவிக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் முரளிதரன், தென்னாபிரிக்க அணியின்தலைவர் வெஸ்செல்ஸ் (47) ஹான்சி குரோன்ஜே (17), ரோடெல்ஸ் (8), சிம்கோஸ் (48), எக்ஸ்ரீன் (1) ஆகியோரை ஆட்டமிழப்பு செய்து அசத்தினார்.

இவ் இன்னிங்ஸில் முரளிதரன் 39 ஓவர்கள் பந்து வீசி 8 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 104 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைகைப்பற்றினார்.

இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் ஒரு இன்னிங்ஸில் முரளிதரன் முதல் தடவையாக 5 விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனையை ஆரம்பித்தார். தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி,6 விக்கெட்டுக்களையிழந்து 300 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தி தென்னாபிரிக்க அணிக்கு வெற்றி இலக்காக 365 ஓட்டங்களை நிர்ணயித்தது.

இதன் மூலம் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி ஐந்தாம் நாள் ஆட்ட நேர முடிவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 251 ஓட்டங்களை எடுத்தது. இதனால் முதலாவது டெஸ்ட் அவற்றி தோல்வி யின்றி முடிபடைய 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் சமனிலையானது.

இரண்டாவது இன்னிங்ஸில் முரளிதரன் 31 ஓவர்கள் பந்துவீசி 11 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 48 ஓட்டங்களைக் கொடுத்து தென்னாபிரிக்க அணித்தலைவர் வெஸ்ஸல்ஸ் (16) ஓட்டங்களுடன் வெளியேற்றி ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

முதலாவது டெஸ்ட் சமனிலையில் முடிபடைந்த நிலையில் இரண்டாவது ஒரு நாள் போட்டி 1993ஆம் ஆண்டு செப்ரம்பர் 3ஆம் திகதி கொழும்பு கேத்தாராம விளையாட்டு அரங்கில் பகல், இரவு ஆட்டமாக நடைபெற்றது.


இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை யிழந்து 222 ஓட்டங்களை எடுத்தது. இதில் 6 ஓவர்கள் மாத்திரம் பந்து வீசிய முரளிதரன் 20 ஓட்டங்களை வழங்கி விக்கெட் எதனையும் வீழ்த்தா மல் ஏமாற்றமளித்தார்.

தொடர்ந்து 50 ஓவர்களில் 223 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 34 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 98 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 124 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதில் முரளிதரன் ஆட்டமிழக்காமல் தனது கணக்கையும் ஆரம்பிக்கவில்லை.

(பயணிக்கும்)

பாலா

# எண் விளையாட்டு-19




*போட்டிவிதிகள்:* மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்களில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாக வர வேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப்புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக்கூடாது.

நேற்றைய பகுதிக்கான விடை



## மக்கள் மீதான தாக்குதல்களை...

கொண்ட அறிக்கை ஒன்றிலேயே இந்த வலியுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் வன்னியில் உள்ள பொதுமக்களின் நலன்களை மீறிச் செயற்படுவதாக அந்த அமைப்பு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை வன்னிப் பிராந்தியத்தினுள், ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு அங்கு நடைபெறுகின்ற விடயங்கள் வெளிவருவதைத் தடுக்க அரசாங்கம் முனைவதாகவும் அதில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு எதிரான இந்த யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என இந்த அறிக்கையின் ஊடாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் சட்ட மற்றும் கொள்கை பணிப்பாளர் ஜேம்ஸ் ரோஸ் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர், வன்னியில் உள்ள வைத்தியசாலைகள் உள்ளிட்ட பொது இடங்களில் ஷெல் வீச்சுக்களை மேற்கொள்வதுடன், அரசாங்கம் அறிவிக்கும் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களிலும் அவர்கள் தாக்குதல்களை நடத்தி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் உள்ள மக்களைப் பாதுகாப்பு வலயங்களுக்கு வர அனுமதிக்க வேண்டும் எனவும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

இரண்டு தரப்பினருக்கும் இடையில் இடம் பெற்றுவரும் யுத்தம் காரணமாக கடந்தசில மாதங்களில் சுமார் 2 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், 5 ஆயிரம் பேர் காயமடைந்திருப்பதாகவும் அந்த அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

பொதுமக்கள் இவ்வாறு பாதிப்புக்களுக்கு உள்ளாவதற்கு இரு தரப்பினரும் பொறுப்புக் கூறவேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்களை மேன்மேலும் சிறிய இடங்களுக்குள் தள்ளி வருவதாகவும் அந்த அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

அத்துடன் தமது கட்டுப்பாட்டில் இருந்து தப்பிச் செல்ல முயலும் பொதுமக்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொள்வதாக குற்றம் சாட்டியுள்ள அந்த அமைப்பு அவ்வாறான தாக்குதல்களையும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

யுத்த சட்டங்களை மீறிய வன்முறைகளை நிறுத்தி இரு தரப்பினரும் பொதுமக்களின் நலனில் அக்கறை செலுத்த வேண்டும் எனவும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் மேலும் அறிவுறுத்தியுள்ளது. (ச-5)



விடுதலைப்புலிகளின் விமானங்களால் தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து சம்பவ இடத்தில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரைப் படத்தில் காணலாம்.

## எறிகணைத் தாக்குதலில்...

(வயது09), இ.இசைக்கீதன் (வயது19), வி.நளாஜினி (வயது 36), ந.சிவகுமார்(வயது30), க.விமல் (வயது30), ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர். பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட வலைஞர்மடத்தில் நேற்று நடத்திய எறி கணைத் தாக்குதலில் 2 பேர் காயமடைந்துள்ளனர்.

பி.விநாயகன் (வயது21) மற்றும் வீ.விஜேந்திரன் (வயது29) ஆகியோர் காயமடைந்துள்ளனர். இதேவேளை புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் நடத்திய எறிகணைத் தாக்குதலில் படுகாயமடைந்த சிறுமி ஒருவர் நேற்று சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார்.

யாழ்.வடமராட்சி உடுத்துறையைச் சேர்ந்த பொன்னுத்துரை சுமதா (வயது10) என்பவரே உயிரிழந்துள்ளார். (ச-5)

## தாக்குதல்...

புத்தளம் ஆராய்ச்சிகட்டுவ பகுதியில் வைத்து சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிசார் உறுதிப்படுத்தினர் என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதேவேளை புலிகளின் இந்த விமானத் தாக்குதலில் ஏற்பட்ட உண்மையான சேத விபரங்கள் அல்லது எவ்வாறான தாக்குதல் இடம் பெற்றது என்பது பற்றிய சுயாதீன தகவல் எதையும் பெற முடியாத வகையில் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் ஊடகங்களுக்கு மறைமுகமான தடை உத்தரவு ஒன்றை நேற்றிரவு பிறப்பித்ததாக கொழும்பு ஊடகங்கள் தெரிவித்தன. (ச-5)

## தற்கொலைத்...

அது பலனின்றி போயிருக்கலாம் என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். விமானத் தாக்குதலால் ஏற்பட்ட சேதவிபரம் மற்றும் புலிகள் தரப்பு தகவல்கள் என்பன வெளியாகாததால் இது குறித்து கருத்துக் கூறமுடியாத நிலை காணப்படுவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். (எ-1)

## புதுக்குடியிரு...

பொக்கணை என்ற இடத்தை படையினர் முழுமையாக தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாகவும் புதுக் குடியிருப்புக்கு மேற்கே நிலத்திற்கடியில் 3 அடுக்குகளைக் கொண்ட விடுதலைப்புலிகளின் வசிப்பிடமொன்றையும் படையினர் நேற்றுக் காலை கண்டுபிடித்திருப்பதாகவும் விடுதலைப் புலிகளின் மூன்று சடலங்கள் உட்பட பெருமளவு ஆயுத தளபாடங்கள், வெடி பொருள்களை கைப்பற்றியிருப்பதாகவும் நீருக்கடியில் செல்லும் நவீன மோட்டார் வண்டிகள், நீருக்கு அடியில் செல்லும்போது அணியும் உடைகள் என்பன கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது. (ச-5)

## இராணுவத்...

தேவையான ஆலோசனைகளை வழங்கும் நோக்கில் யாழ்.வந்த இராணுவத் தளபதி, யாழ்.கட்டளைத் தளபதி தலைமையிலான உயர் அதிகாரிகள், இரா ணுவத்தின் 51,52 மற்றும் 55ஆவது படைப் பிரிவின் கட்டளைத்தளபதிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

யாழ்.பாதுகாப்பு படைப்பிரிவின் கட்டளைத் தலைமையகத்தில் நடைபெற்ற சந்திப்பின்போது அங்குள்ள தற்போதைய நிலைமைகளை அதிகாரிகள் விளக்கியுள்ளனர் என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது. (ச-5)

### பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்துடன் வாக்காளர் உரிமப் பத்திரம் அனுப்புவது தற்காலிக நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்துடன் வாக்காளர் உரிமப்பத்திரம் இணைத்து அனுப்பப்படுதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

2008/2009ஆம் ஆண்டு பல்கலைக் கழக அனுமதிக்கான விண்ணப்பத்துடன் வாக்காளர் உரிமப்பத்திரம் தொடர்பான அத்தாட்சி கடிதத்தை இணைத்து அனுப்புமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கேட்டிருந்தது.

எனினும் வாக்காளர் உரிமம் உறுதிச் சான்றிதழை தயாரித்து வழங்குவதில் தாமதம் ஏற்படும் என்பதால் அதனை தற்காலிகமாக நிறுத்துமாறு தேர்தல்கள் ஆணையாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார்.

இத்தகவலை யாழ்அரச அதிபர் க.கணேஷ் உறுதிப்படுத்தியுள்ளார். (ச-5)

## விடுதலைப் புலிகளின் விமானங்...

கொழும்புக்குள் பிரவேசித்த விடுதலைப்புலிகளின் இரண்டு விமானங்கள் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் நேற்றிரவு குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியிருக்கின்றன. விடுதலைப்புலிகளின் விமானங்களில் ஒன்று கொழும்பு கொம்பனித்தெரு அதியுயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மீது குண்டு ஒன்றைப் போட்டுள்ளது.

இதனால் கட்டடத்திற்கு பலத்த சேதமேற்பட்டிருப்பதுடன் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். 48 பேர் படுகாயமடைந்து கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். புத்தளம் பகுதியூடாக நேற்று வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் இரண்டு விமானங்கள் கொழும்பு நகரை நோக்கிப் பிரவேசிப்பது கற்பிட்டிப் பகுதியிலுள்ள ராடர்களால் அவதானிக்கப்பட்டது.

உடனடியாகவே கொழும்பு நகரில் விமான எதிர்ப்பு பொறிமுறையை செயற்படுத்திய படையினர், கொழும்பு நகரின் முழுமையான மின்சாரத் தடையை ஏற்படுத்தினர்.

அவ்வேளையில் வானை நோக்கி வெளிச்சம் பாய்ச்சப்பட்ட அதேவேளையில் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி வானை நோக்கி கடுமையான துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது. இதனால் கொழும்பு நகர் இரவு 9.20 முதல் சுமார் ஒரு மணி நேரத்திற்கு துப்பாக்கி வேட்டுச் சத்தங்களால் அதிர்ந்து கொண்டிருந்தது.

இதனால் கொழும்பில் பெரும் பதற்றம் காணப்பட்டது. இந்த வேளையில் கொழும்பு கோட்டை அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் பிரவேசித்த விடுதலைப் புலிகளின் விமானங்களில் ஒன்று உள்நாட்டு இறைவரித் திணைக்கள கட்டடத்தின் மீது குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளது.

பாரிய சத்தத்துடன் இந்தக் குண்டுவெடித்தபோது 13 மாடிகளைக் கொண்ட இந்தப் பாரிய கட்டடம் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது. கட்டடத்தின் சிதைவுகள் வீதியில் சிதறிக் கிடக்கின்றன என தெரிவிக்கப்படுகின்றது.

உடனடியாகவே தீயணைப்பு படையினரும் மீட்புப் பிரிவினரும் அப்பகுதிக்கு விரைந்து மீட்பு நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர். சுமார் ஒரு மணிநேரத்தில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகத் தெரிகிறது.

இத்தாக்குதலில் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் இரவு 11.30 மணியளவில் சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த 48 பேர் இதுவரையில் மீட்கப்பட்டு கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் இருவரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. காயமடைந்தவர்களில் பெரும்பாலனவர்கள் விமானப் படையைச் சேர்ந்தவர்கள் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு முன்பாகவே விமானப் படையின் தலைமையகம் அமைந்திருக்கிறது.

விமானப்படை தலைமை அலுவலகத்தை இலக்கு வைத்தே விடுதலைப் புலிகளின் விமானம் தாக்குதலை நடத்தியிருக்கலாம் எனவும் இலக்குத் தவறி அதற்கு முன்பாகவுள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டடத்தின் மீது குண்டு வீழ்ந்திருக்கலாம் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து இலங்கை வங்கிக் கட்டடம் உட்பட பல கட்டடங்களும் சேதமடைந்துள்ளதாகவும் கூறப்பட்டது. சம்பவத்தையடுத்து பாதையை மூடி தடை விதித்துள்ள படையினர் இடிபாடுகளுக்குள் யாராவது சிக்கியிருக்கலாம் என்பதால் தேடுதலை தொடர்ந்து மேற்கொண்டுள்ளனர்.

மேலதிக விபரங்கள் செய்தி அச்சுக்கும்போகும்வரை கிடைக்கப்பெறவில்லை. (ச-5)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கராசா ஐயர் இராசமணி



செல்வச்சந்நிதி கோயிலடியைச் சேர்ந்த திருமதி தங்கராசா ஐயர் இராசமணி நேற்று முன்தினம் (19.02.2009) வியாழக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி ஐயர் - தங்கப்பொன்னு தம்பதியினரின் அன்பு மகளும், இரத்தினசாமி ஐயர் - நாகம்மாவின் அன்பு மருமகளும், தங்கராசா ஐயரின் அன்பு மனைவியும், பொன்மணி அம்மா, கனகேந்திரன் ஐயர், மகேஸ்வரி, காலஞ்சென்ற ரவீந்திரன், குகனேந்திரா ஐயர், அகிலேந்திரா ஐயர், இரத்தினவதனி மற்றும் காலஞ்சென்ற சின்னையா ஆகியோரின் அன்புத் தாயாரும்;

தேவரத்னலிங்கம், நாகேஸ்வரி, வசந்தமலர், ஜெயசுந்தரம், சசிகலாதேவி, இரத்தினகுமாரி, கோடீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் மற்றும் கவிதா, ஸ்ரீகதிர்காமநாதன், சுகிதா, ரவீந்திரன், அனிதா, சுயேந்திரகுமார், செந்தீபன், தமயந்தி, ரவிந்தன், காலஞ்சென்ற கஜந்தன், சுதர்சன், மயூரதன், கார்த்திகா, ராஜசேகரம், வைகுந்தன், சேந்தன், யாழினி, முரளிதரன், திவ்வியா, கிருஷ்ணாகரன், ரவிராஜ், சாளினி, தாட்சாயினி, அகிலா, அமலா, அகிலேஸ், ஸ்ரீராம், ஸ்ரீகிருஷ்ணா, ஸ்ரீஜினி ஆகியோரின் பேர்த்தியும்,

மயூரதி, தீபிகா, சுதர்சினி, ஸ்ரீவாணி, ராகவி, ஸ்ரீபவன், பிரணவன், பிரணவி, சுசீபன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடத்தப்பட்டு பின்னர் வெல்லங்கராய் இந்து மயானத்தில் இன்று (21.02.2009) சனிக்கிழமை காலை 8 மணியளவில் ஈமக்கிரியை நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

தகவல்:
குடும்பத்தினர்
த.குகனேந்திரா ஐயர்

(C-2273)

MOBILE NET MCS COMPUTER SERVICES
CIMA
MCS
Supported By UNDP/JRRP
CIMA கற்கை நெறிகள் ஆரம்பம்
காலம்: 22 பெப்ரவரி 2009 மாலை 1 மணி
பதிவுகளை 21.02.2009 க்கு முன்பு மேற்கொள்ளவும்.
விபரங்களுக்கு- 324 Palaly Road, Near Parameswara junction,
Bus Root-764

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.02.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.